KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 33, 15 May 2026 இதழ்:- 18

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage

## 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணிக்கு உறவுகளே! மே மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 15வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# தி.மு.க - அ.தி.மு.கவை மீறி விஜய்க்கு முதல் தேர்தலிலேயே பெரு வெற்றி எப்படிக் கிடைத்தது?

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக, அதிமுக இரு பிரதான திராவிட கட்சிகளையும் பின்னுக்குத் தள்ளி விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் 108 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் போட்டியிட்ட கொளத்தூர் தொகுதியில் தவெக வேட்பாளர் வி.எஸ்.பாபு வெற்றி பெற்றார். அவரது அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த பலரும் தத்தமது தொகுதிகளில் பின் தங்கியுள்ளனர். தற்போதைய நிலவரம் தமிழ்நாட்டில் மக்கள் மாற்றத்தை விரும்பினார்கள் என்பதையே காட்டுவதாக அரசியல் நிபுணர்கள் கூறுகின்றனர். (17ம் பக்கம் பார்க்க)



## தமிழகத் தேர்தல் முடிவுகள்- வெற்றியின் விபரங்கள்

# தையிட்டி விகாரை உள்வீதியை மீட்கும் முயற்சியைக் கை விடு! தவிசாளர் சுகிர்தனை அழைத்து மிரட்டிய பலாலி பொலிசார்



தையிட்டி சட்டவிரோத விகாரை அமைந்துள்ள பகுதிக்குள் காணப்படும் பிரதேச சபைக்கு சொந்தமான வீதியை மீட்கும் நடவடிக்கையை பிரதேச சபை கைவிட வேண்டும் என வலி. வடக்கு பிரதேசசபை தவிசாளர் சோ.சுகிர்தனை பலாலி பொலிஸார் அழைத்து அச்சுறுத்தும் வகையில் கூறியுள்ளனர்.

தையிட்டி விகாரை அமைந்துள்ள பகுதிக்குள் வலி. வடக்கு பிரதேசசபைக்கு சொந்தமான பவானி வீதி காணப்படுகிறது. குறித்த வீதியினை கடந்த 28ஆம் திகதி தவிசாளர் அடையாளம் காட்டி. அதனை நில அளவையாளர்கள் அளந்து வீதியினை குறித்து இருந்தனர். (8ம் பக்கம் பார்க்க)

# தமிழர்களின் மனக்குறைகள் முழுமையாக நீங்கவில்லை! ஆனாலும் உங்களில் நம்பிக்கை இருக்கிறது அநுரவிடம் கம்பன் கழகம் கோரிக்கை!





THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

Your neighborhood sales representative

PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

RE/MAX ACE REALTY INC., BROKERAGE — EXPERIENCE THE DIFFERENCE — INDEPENDENTLY OWNED & OPERATED

we are ace




**Siva Kandiah**
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com

**Piravien Siva**
Sales Representative B.Comm.
Dir: 647-221-5220
piravien@gmail.com

MLS

23 Years Real Estate Experience

150 Consumers Rd #109, North York, ON M2J 1P9, Canada

Bus: 416-293-4500



• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


## Adelaide Ave E / Simcoe St


**Oshawa** $699,000
3+2 Beds • 2 Baths • 9 Rooms
high-demand rental area


## Kingston Rd & Sheppard Ave E


**Scarborough** $710,000
3+2 Beds • 3 Baths • 8 Rooms
open living and dining area

## Islington Ave / Steeles Ave W

**Toronto** $749,000
4 Beds • 2 Baths • 8 Rooms
Corner Condo Townhouse

## Neilson Road & Sheppard

**Scarborough** $839,000
4+1 Beds • 3 Baths • 7+3 Rooms
Location, location, location!

## Danforth and Dawes

**Toronto** $839,999
2+1 Beds • 2 Baths • 7 Rooms
Corner suite, unobstructed views

## Williamson & Westney

**Ajax** $849,000
3 Beds • 3 Baths • 7 Rooms
Detached 2-storey home


## Rogers and Dufferin St

**Toronto** $849,999
3 Beds • 2 Baths • 6+1 Rooms
fully renovated from top to bottom


## Markham Rd & Lawrence Ave


**Scarborough** $999,000
3+3 Beds • 4 Baths • 6+5 Rooms
fully renovated bungalow

## Harmony Road / Conlin Road

**Oshawa** $999,000
4 Beds • 3 Baths • 9 Rooms
Upgraded from top to bottom

## Cameo St / Burkolder Dr

**Pickering** $999,900
3 Beds • 3 Baths • 7 Rooms
Newly built detached home

## Hwy10 / Hwy 89

**Shelburne** $999,900
5 Beds • 5 Baths • 10 Rooms
Luxurious savile row model home

## Markham/Steeles

**Markham** $999,999
3+1 Beds • 3 Baths • 6+2 Rooms
Fin.basement with sep.entrance

## Markham Rd/ Lawrence Ave E
FOR LEASE

**Scarborough** $2,700
3 Beds • 1 Baths • 6 Rooms
Recently refreshed with new paint

## Markham Rd & Sheppard Ave
FOR LEASE

**Scarborough** $2,250
1+1 Beds • 1 Bath • 5 Rooms
Open concept w/ natural sunlight

## Simcoe St/ Windfields Farm Dr
FOR LEASE

**Oshawa** $1,500
1 Bed • 1 Bath • 3 Rooms
Basement with sep entrance

## Markham & Denison
FOR LEASE

**Markham** $1,450
1 Bed • 1 Bath • 4 Rooms
Basement with sep entrance

**EELANADU**
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# கனடாவாழ் கருணையாளர்களின் கவனத்திற்கு!

என் இனிய உறவுகளே! கனடாவாழ் கருணையாளர்களே! முல்லைத்தீவு பிராந்தியத்தில் அமைந்துள்ள பாரதி இல்லம், கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்பு இல்லம் மற்றும் செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் குழந்தைகளது உணவுத் தேவையை கடந்த 14 ஆண்டுகளாக தங்கு தடையின்றி நிறைவேற்றி வந்தவர்கள் நீங்கள்.


தற்போதைய பொருளாதார நெருக்கடிகள், வீட்டு அடமான வட்டி வீத அதிகரிப்புக்கள் போன்ற பல்வேறு நெருக்கடிகள் காரணமாக இந்தக் குழந்தைகளுக்கான உதவிகள் குறைந்துள்ளது. இதனால் இக்குழந்தைகளின் வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் என்று பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொள்ளும் நிலையேற்பட வாய்ப்புள்ளது என்பதால் ஒவ்வொரு தமிழரும் குறிப்பாக கனடியத் தமிழர்கள் இக் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒருநாள் வரும் உங்கள் பிறந்த நன்நாள்கள், திருமண நன்நாள்கள், உங்கள் குழந்தைகளின் பிறந்த நன்நாள்கள் மற்றும் உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இக்குழந்தைகளையும் நினைத்து ஒருநாள் உணவளிக்க முன்வாருங்கள்!

தர்மம் தலை காக்கும். கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க அன்னதானம் வழங்குவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் குழந்தைகளின் வாழ்த்துக்கள் உங்களை மட்டுமல்ல உங்கள் சந்ததி வாழ வைக்கும்.

நீங்கள் வழங்குகின்ற உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள eelanadu.ca என்ற மின்னிதழில் வெள்ளிக்கிழமை தோறும் பார்வையிடலாம். உங்கள் ஆதரவே இக்குழந்தைகளின் வாழ்வாதாரம்.

இலங்கை சிறுவர் நன்னடைத்தை மற்றும் பராமரிப்பு கண்காணிப்பு அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமைய குழந்தைகளின் புகைப்படங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும் ஈழநாடு பரமேஸ் 416 8419600 (கனடா) eelanadu1993 @gmail.cam என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.

# ஈழத்தமிழர்கள் தந்தை செல்வாவை ஏற்றுக் கொண்டது போல் தமிழ்நாட்டு மக்களும் ஜோசப் விஜய்யை ஏற்றுக் கொண்டுள்ளமை மகிழ்சி தருகிறது



ஈழத்தமிழர்கள் கிறிஸ்தவரான தந்தை செல்வாவை தமது தானைத் தலைவராக ஏற்று ஈழத் தமிழர்கள் முன் மாதிரியாக திகழ்ந்தனர். அதே போன்று தமிழ்நாட்டு மக்களும் மொழி அடையாளதத்தை முன்னிறுத்தி கிறிஸ்தவரான ஜோசப் விஜய்யை தமது தலைவராக ஏற்றுக்கொண்டுள்ளனர் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூ ப் ஹக்கீம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் 06 மே 2026 புதன் கிழமை இடம் பெற்ற மீட்பு புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்க வகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட) சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தமிழ்நாட்டில் முதலமைச்சராக பிரபல சினிமா நட்சத்திரமாக எங்களுக்கு அறிமுகமான ஜோசப் விஜய் பதவியேற்கவுள்ளார். எவ்வித தயக்கமும் இன்றி தன்னை கிறிஸ்தவர் என்று அடையாளப்படுத்தியவர். அது வரையில் தன்னை தளபதி விஜய் என்று அடையாளப் படுத்தி கூறியவர் தற்போது ஜோசப் விஜய் என்று கூறியதன் மூலம் தான் சார்ந்திருந்த சமயத்தை அடையாளப் படுத்தும் பெயரை தயங்காமல் குறித்து பேசி இன்று முழு தமிழகத்திலும் அதி கூடிய ஆசனங்களை வென்றுள்ள தளபதி விஜய்க்கு எமது கட்சியின் சார்பில் வாழ்த்துக்களை கூறிக்கொள் கின்றேன்.

சமயம் சார்ந்து தமிழ் பேசும் மக்கள் மத்தியில் அவ்வாறான பாரம்பரியம் இருக்கக்கூடாது. மொழி அடிப்படையில் ஒரே மொழியை பேசும் இனமாக நாங்கள் எங்களை பெருமையுடன் அடையாளப்படுத்த வேண்டும் என்று தமிழ் பேசும் மக்களிடையே அந்த உணர்வை தூண்டுகின்ற அந்த கருத்து வலுப் பெற்றதானது திராவிட இயக்கங்களின் வளர்ச்சியின் மூலம் என்பதனை சுட்டிக்காட்ட வேண்டும். அதேபோன்று எல்லாவற்றையும் முந்திக் கொண்டு இலங்கையிலேயே தந்தை செல்வா எனப்படும் தனிப்பெரும் ஆளுமையை ஒரு கிறிஸ்தவர் என்பதற்காக ஒதுக்கிவிடாமல் தங்களுடைய தானைத் தளபதியாக வரித்துக்கொண்டதன் மூலம் ஈழத்து மக்களே முதலில் எந்த மத அடையாளத்திற்கும் அடிமைப்



படாமல் தமது மொழி அடையாளத்தை முன்னிறுத்தி ஒரு தேசிய அடையாளத்திற்கு வழியேற்படுத்தினர் என்பது பெருமையுடன் கூறிக்கொள்ளும் விடயமாகும்.

அதேநேரம் விஜய் தேர்தல் காலங்களில் குறிப்பாக கச்சதீவை பற்றி பேசியிருந்தார். இரண்டு இறைமையுள்ள நாடுகளுக்கிடையில் கைச்சாத்திடப்பட்டிருக்கும் விவகாரம் தொடர்பில் கதைப்பதை விட அதனை விடவும் மிக முக்கியமான பாரதி சொன்னது போல் தமிழ் நாட்டுக்கும் இலங்கையில் தமிழர்களும் முஸ்லிம்களும் வாழுகின்ற வடக்கிற்கும் இடையில் பாலம் அமைக்க அவர் கூடிய கவனம் செலுத்த வேண்டும். அதற்காக அவர் மத்திய அரசை வலியுறுத்த வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**

# தமிழர்களின் மனக்குறைகள் முழுமையாக நீங்கவில்லை! ஆனாலும் உங்களில் நம்பிக்கை இருக்கிறது - அநுரவிடம் கம்பன் கழகம் கோரிக்கை!

தமிழர்களின் மனக்குறைகள் இன்னும் முழுமையாய் நீங்கவில்லை. அடக்குமுறைகள் ஆங்காங்கே இன்னும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனாலும் எல்லா இனங்களும் ஒற்றுமையாய் வாழும் ஓர் இலங்கையை நீங்கள் முழுமையாய் ஆக்கித் தருவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு வந்திருக்கிறது என அகில இலங்கை கம்பன் கழகம், ஒட்டுமொத்த தமிழ் மக்களின் நிலைப்பாட்டை தமிழர்கள் சார்பில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிடம் தெரிவித்துள்ளது.

அகில இலங்கை கம்பன் கழகம் வழங்கும் உயரிய விருதான கம்பன் புகழ் விருதினை ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு 03 மே 2026 ஞாயிற்றுக்கிழமை மாலை கொழும்பு இராம கிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்றது.

அந்த நிகழ்வின் போது அனைத்து தமிழ் மக்களின் சார்பில் முன் வைக்கும் கோரிக்கை அடங்கிய செய்தியினை ஜனாதிபதி முன்னிலையில் கம்பன் கழகத்தின் ஸ்தாபிதச் செயலாளர் குமார தாசன் வாசித்தார். அதில் தெரிவிக்கப்பட்டதாவது,

மதிப்பிற்குரிய ஜனாதிபதி அவர்களே, இந்நாட்டின் அரசியல் வரலாற்றில் நீங்கள் புதியதொரு புரட்சியைச் செய்ய முயன்று வருகிறீர்கள்.

சுதந்திரத்திற்குப் பின்னால் உள்ள இந்நாட்டின் அரசியலில் தமிழர்களாகிய நாங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதை தாங்கள் அறிவீர்கள். இலங்கையின் பிரஜைகளாக, இம்மண்ணின் வளர்ச்சிக்கு இந்நாட்டுத் தமிழ் மக்களும் பெரும் பங்களிப்பினை ஆற்றி உள்ளனர். ஆனாலும் இனவெறி பிடித்த சிலர் தமிழர்களை இந்நாட்டின் இரண்டாம் தரப் பிரஜைகள் ஆக்க முயன்றனர். அதனால் ஏற்பட்ட முரண்பாட்டில்



தமிழர்களது உயிர், உடல், உடைமை என அனைத்தும் பலதரமாய்ச் சிதைக்கப்பட்டது வரலாறு. வேண்டுமென்றே தமிழர்கள் வாழ்ந்த தாய் மண்ணை சிலர் சிதைக்கவும், அபகரிக்கவும் முயற்சி செய்து இந்நாட்டின் மீதான பற்றினை நம் இளையோர் மனதிலிருந்து நீக்க முயன்றனர். அதனால் விளைந்த கொடிய போரினால், மூன்று தசாப்தங்களாகத் தமிழ், சிங்கள இனங்கள் மட்டுமன்றி இந்நாட்டில் வாழும் அனைத்து இன மக்களும் பாதிப்புற்றனர்.

இருள் சூழ்ந்திருந்த நமது அரசியல் வரலாற்றில் ஒளி தரும் சூரியனாய் தாங்கள் உதித்திருக்கிறீர்கள். முதல் முதலாய் அனைத்து இனங்களையும் அணைத்துக்கொண்டு இம்மண் எல்லோருக்கும் உரியது எனச் சொல்லி எங்களது மனங்களைக் கவர்ந்து உயர்ந்து நிற்கிறீர்கள்.

உங்களின் வருகையால் இந்நாட்டில் வாழும் எல்லா இன மக்களுக்கும் இத்தேசத்தின் மீதான பற்று அதிகரித்திருக்கிறது.

பகை நீங்கி எல்லா இன மக்களும் ஒருவரையொருவர் நேசிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். உங்களால் ஏற்பட்டிருக்கும் தன் புதல்வர்களது ஒற்றுமை முயற்சி கண்டு இலங்கை அன்னை மகிழத் தொடங்கியிருக்கிறாள்.

மேதகு ஜனாதிபதி அவர்களே, நீங்கள் தொடங்கியிருக்கும் அரசியல் பாதை



மிகக் கடினமானது என்பதை நாம் அறிவோம். ஒரே நாளில் மாயாஜாலம் செய்வது போல இந்நாட்டின் அரசியல் போக்கை மாற்றி விட முடியாது என்பதையும் நாம் அறிவோம். நீங்கள் பல தடைகளையும் தாண்டி ஓட வேண்டியிருக்கும் என்பதை நாங்கள் அறிவோம்.

தமிழர்களின் மனக்குறைகள் இன்னும் முழுமையாய் நீங்கவில்லை. அடக்குமுறைகள் ஆங்காங்கே இன்னும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனாலும் எல்லா இனங்களும் ஒற்றுமையாய் வாழும் ஓர் இலங்கையை நீங்கள் முழுமையாய் ஆக்கித் தருவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு வந்திருக்கிறது.

அதனால் தான் அரசியலாளர்களைக் கடந்து உங்கள் மீதான தமிழ் பொது மக்களின் நம்பிக்கையை வெளிப்படுத்த வேண்டுமென நாங்கள் முடிவு செய்தோம். அம்முடிவின் படிதான் இதுவரை கலைத்துறைகள் சார்ந்த தமிழர்களுக்கு மட்டும் வழங்கப்பட்டு வந்த தமிழினத்தின் உயர்விருதான இந்த ‘கம்பன் புகழ்’ விருதினை முதல் முறையாக அரசியல் துறை சார்ந்த சிங்களவரான உங்களுக்கு நாங்கள் வழங்கிப் பெருமைப்படுகிறோம்.

தமிழ் மக்கள் உங்களது நேர்மையான புரட்சிக் கரங்களைப் பலப்படுத்த உங்களோடு இணைந்து நிற்கிறார்கள் என்பதற்கான ஓர் அடையாளமாகவே இவ்விருது அமைகிறது என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்’’ என்று கம்பன் கழகம் தமிழர்களின் சார்பிலான கோரிக்கையினை ஜனாதிபதியிடம் வெளிப்படுத்தியது.

ஜனாதிபதி தமது உரையில் எமது நாட்டில் உள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம், கிறித்தவர்களுக்கு இடையிலே ஒற்றுமையை கட்டியயெழுப்ப வேண்டிய தேவை இருக்கிறது. நமக்குள் இருக்கும் பிரச்சினைகள் முழுமையாக தீர்க்கப்படவில்லை என்பது எனக்குத் தெரியும். இந்தப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தொடர்ந்து, நாம் இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியிருக்கிறது.

தேசிய ஒற்றுமைக்காக மிகப் பலமான ஒரு அமைப்பை நாம் ஏற்படுத்தி வைத்திருக்கிறோம். எமது இந்த நடவடிக்கையிலிருந்து ஒருபோதும் நாம் பின்வாங்கமாட்டோம். பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. எந்த ஒரு இனவாத மதவாத சிந்தனைகளுக்கும் நாம் இடமளிக்கக்கூடாது.

சகோதரத்துவம் நிறைந்த நாடு நமக்கு தேவை. நாட்டில் பிரிவினை என்பது பல தசாப்தங்களாக உள்ள ஒரு விடயம். இந்நிலையில், ஒரு குறுகிய காலத்தில் ஐக்கியத்தை ஏற்படுத்த முடியும் என்பது கற்பனையானது. அதற்கு நீண்டகாலம் எடுக்கும். அனைவரையும் ஒன்றிணைக்கும் நடவடிக்கையானது பல படிமுறைகளைக் கொண்டது. அதற்கு முதலாவதாக, மக்களுடைய கலாசாரம் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். சிங்கள மக்களுக்கு தமக்கே உரிய ஒரு கலாசாரம் இருக்கிறது. தமிழ் மக்களுக்குத் தனித்துவமான கலாசாரம் இருக்கிறது.
(18ம் பக்கம் பார்க்க)



# முஸ்லிம் தேசத்தின் முன்னோடி தந்தை செல்வா! 49வது ஆண்டு நினைவு நிகழ்வில் அஸ்மின் உரை!

**26-04-2026 அன்று தந்தை செல்வாவின் 49வது சிரார்த்த தினத்தையொட்டி கனடா, டொரோண்டோவில் இடம் பெற்ற நினைவு நிகழ்வில் ஆற்றப்பட்ட திரு அஸ்மின் அவர்களின் உரையின் தொகுப்பு.**




அனைவருக்கும் அஸ்ஸலாமு அலைக்கும், வணக்கம். தந்தை செல்வா அவர்களை தமிழ் மக்களின் தலைவராக மட்டும் விழித்து, என்னை ஒரு அயலவனாக அழைத்து உரை நிகழ்த்தச் சொல்வதில் எனக்கு உடன்பாடு இல்லை. தந்தை செல்வா அவர்களை தமிழ் பேசும் மக்களின் தலைவராக விழித்து, தமிழ் பேசும் ஒருவனாக என்னை அழைத்து உரை நிகழ்த்தக் கேட்பதே சிறப்பு. ஏனெனில் தந்தை செல்வா எனக்கும் உரித்தானவர் அவர் எனக்கும் எனது மக்களினதும் தலைவரே.

1998ஆம் ஆண்டு தலைவர் அஷ்ரப் அவர்கள் சந்திரிக்காவின் அரசில் ஒரு பலமிக்க அமைச்சராக இருந்த போது, தந்தை செல்வா நினைவு நிகழ்வொன்றை கொழும்பில் ஏற்பாடு செய்திருந்தார். அங்கு ஒரு சிறு நினைவு மலர் வெளியிடப்பட்டது. அதில் வானவர்களின் இறக்கைகளில் தந்தை செல்வா என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது. இஸ்லாமிய மக்களிடையே வானவர் என்ற சொல் மிகுந்த ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்தது. ஏன் இஸ்லாமியர் அல்லாத ஒருவரை வானவர்களோடு இணைத்து ஒரு நூல் வெளியிடப்பட்டது என்ற கேள்வி எனக்குள் எழுந்தது. பின்னர் அது ஒரு விமர்சனமாக மாறியது. அதன் பின்னர் தான் தந்தை செல்வா தொடர்பில் எனது தேடல்கள் தொடங்கின.

2012 மற்றும் 2013 ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தந்தை செல்வா நினைவு நிகழ்வுகளில் நான் பேச்சாளராக அழைக்கப்பட்டேன். அண்ணன் மாவை சேனாதிராஜா அவர்கள் இரு நிகழ்வுகளிலும் நான் பேச வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். 2013ஆம் ஆண்டு சிறப்பு பேச்சாளராக முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ஹக்கீம் அவர்கள் அழைக்கப்பட்டிருந்தார். எனது உரையில் நான் குறிப்பிட்டேன்:

வடக்கு—கிழக்கு முஸ்லிம் மக்களை ஒரு தேசமாக அறிமுகப்படுத்தியவர் தந்தை செல்வா. தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் ஒற்றுமையை விரும்பி பல முன்னுதாரண செயற்பாடுகளை மேற்கொண்டவர் அவர். இன்று அவரைப் பற்றி பேச ஹக்கீம் அவர்கள் வந்திருப்பது நல்லது. ஆனால் ஒரு கேள்வி 2012 கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்குப் பிறகு தமிழ் தேசிய கூட்டமைப்பும், முஸ்லிம் காங்கிரசும் இணைந்து ஆட்சி அமைக்க வாய்ப்பு இருந்த போது அந்த வாய்ப்பை தமிழ்—முஸ்லிம் ஒற்றுமைக்காக பயன்படுத்தாததற்கு காரணம் என்ன? என்று கேட்டேன்.

இந்தக் கேள்விக்குப் பிறகு மண்டபத்தில் பலத்த கரகோஷம் எழுந்தது. ஹக்கீம் அவர்களுக்கும் அதை எதிர்கொள்வது சற்று சங்கடமாக இருந்தது.

இவ்வாறு, தந்தை செல்வா அவர்களின் அரசியல் கொள்கைகளிலும் செயற்பாடுகளிலும் நான் முக்கியமாக கண்ட விடயம், தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை ஒருங்கிணைத்து தனது அரசியல் இலக்கை நோக்கிப் பயணித்தது.

அந்த அடிப்படையில் வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களை ஒரு தேசமாக அறிமுகப்படுத்தியதும், அப்பகுதியில் வாழும் அனைவரையும் தமிழ்பேசும் மக்கள் எனக் குறிப்பிட்டமையும் முக்கியமானது.

அடுத்து, அவரை ஏன் தந்தை என்று குறிப்பிடுகிறோம் என்ற கேள்வி எழுகிறது. இலங்கையின் வடக்குகிழக்கில் வாழும் மக்களை முதன்முதலாக ஒரு தேசம் என அடையாளப்படுத்தியவர் அவர். நவீன அரசியல் ஒழுங்கில் தேசம் என்பது ஒரு இனத்தின் சுயாதீனத்தையும் சுதந்திரத்தையும் குறிக்கும் உயர்ந்த கருத்தாகும். தமிழ்பேசும் மக்களை ஒரு தேசமாக அறிமுகப்படுத்தியது, அவரை தந்தை என மக்கள் அழைப்பதற்கான முக்கிய காரணமாகும்.

அடுத்து, அந்த மக்களுக்கு ஒரு ஆள்புலம்பூகோள எல்லைகள் கொண்ட நிலம் அதாவது அவர்களின் தாயகம் உள்ளது என அவர் முன்னிறுத்தினார். இறுதியாக, அந்த மக்கள் தங்கள் நிலத்தில் தாமே ஆளும் சுயநிர்ணய உரிமையுடையவர்கள் என அவர் வலியுறுத்தினார்.

தேசம், தாயகம், சுயநிர்ணயம் ஆகியவை தமிழ்மொழி பேசும் மக்களுக்கான அடிப்படைகள் என அவர் முன்வைத்தார். இதன் மூலம் தமிழ்பேசும் இலங்கை மக்களின் அரசியல் அங்கீகாரம் உலகளவில் வெளிப்பட்டது. இந்த அடிப்படைகளை சிங்களம் ஒரு போதும் எதிர்பார்க்கவில்லை. அவர்கள் தமிழ்பேசும் மக்களை அடக்கி ஆள முடியும், அவர்களின் வளங்களை சூறையாட முடியும், அவர்களை கீழானவர்களாக நடத்த முடியும் என எண்ணினர். காஷ்மீர், ரோஹிங்கியா, தென் சூடான், பாலஸ்தீனம் போன்ற பகுதிகளில் உள்ள மக்களைப் போலவே தமிழ் பேசும் மக்களையும் அரசியல் அடக்கு முறையில் வைத்திருக்க முடியும் என சிந்தித்தனர். ஆனால் தந்தை செல்வா அவர்களின் அரசியல் அணுகுமுறை அந்த எண்ணத்தை சிதைத்தது.

1949 முதல் 1976 வட்டுக்கோட்டைத் தீர்மானம் வரை தந்தை செல்வா அவர்கள் தமிழ்பேசும் மக்களின் அரசியலை ஒரே திசையில் முன்னெடுத்தார். 1980களுக்குப் பிறகு நிலைமைகள் மாறின. 36க்கும் மேற்பட்ட தமிழ் போராட்டக் குழுக்கள் தோன்றின. தமிழ் பேசும் மக்கள் என்ற அடையாளம் சிதைந்து, தமிழ் மக்கள் மற்றும் முஸ்லிம் மக்கள் எனப் பிளவு ஏற்பட்டது. பல உரிமை மீறல்களும் கசப்பான அனுபவங்களும் நிகழ்ந்தன.

1980 முதல் 2009 வரை தமிழ் மக்களின் போராட்டத்திற்கு ஒரு தலைமை இருந்தது. ஆனால் இன்று தமிழ் மக்களின் அரசியல் விடுதலையை யார் வழிநடத்துகின்றனர்? வடக்கு கிழக்கு முஸ்லிம் மக்களின் உரிமை அரசியலை யார் முன்னெடுக்கின்றனர்? இந்தக் கேள்விகள் கடந்த 17 ஆண்டுகளாக பதில் இன்றியே உள்ளன.

கடந்த 50 ஆண்டுகளின் அனுபவங்களை எடுத்துக் கொண்டு, மீண்டும் இலங்கை தமிழ்பேசும் மக்களின் அரசியல் உரிமைகளுக்கான ஒரு கூட்டு முயற்சியையும், கூட்டு தலைமைத்துவத்தையும் நாம் சிந்திக்க வேண்டாமா? இந்த சிந்தனையை தந்தை செல்வா நினைவு தினத்தில் உங்களிடம் விட்டு செல்கிறேன். வாய்ப்புக்கு நன்றி.

# கனடா இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கத்தின் புதிய தலைவராக திரு கிருஷ்ணகோபால் தெரிவு!

கனடா இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கத்தின் புதிய தலைவராக திரு. கிருஷ்ணகோபால் அவர்கள் தெரிவு!

கிருஷ்ணகோபால் பெயரே மனிதநேயத்தின் நிழற்குடை!

வர்த்தக வெற்றியின் உச்சியில் நிற்கின்ற போதிலும், மனதில் மனிதாபிமானத்தின் ஒளியை அணைய விடாத அரிய மனிதர்!

கனடாவின் வர்த்தக உலகில் தனித்துவம் பெற்று விளங்கும் திரு கிருஷ்ணகோபால் அவர்கள், வெறும் வணிக முன்னேற்றத்திற்காக மட்டும் அல்லாது, சமூகப் பொறுப்புணர்வின் சின்னமாகவும் திகழ்ந்து வருகிறார். அம்மா நகை அடைவுமாடம் என்ற வணிக நிறுவனத்தின் மூலம் பொருளாதார வளத்தை உருவாக்கிய அவர், அதையே சமூக நலப் பணிகளின் வழியே மக்களிடம் மீண்டும் செலுத்தும் உயர்ந்த பண்பினை கொண்டவர்.

இன்று கனடா இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டிருப்பது, அவரின் நேர்மையும், நம்பிக்கையும், சேவையும் பெற்ற மரியாதையின் முத்திரையாகும். இது ஒரு பதவி உயர்வு அல்ல. இது வர்த்தக சமூகத்தின் நன்றியின் வெளிப்பாடு!

கடந்த காலங்களில், குறிப்பாக அவர் தலைவராகவும் திரு கேதா நடராஜா அவர்கள் செயலாளராகவும் இருந்த காலகட்டத்தில், அந்தச் சங்கம் தாயகத்தில் செய்த மனிதாபிமானப் பணிகள் மறக்க முடியாதவை. உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை ஊடாக கிளிநொச்சியில் இயங்கும் செஞ்சோலை சிறுவர் இல்லத்திற்காக சுமார் 40 இலட்சம் ரூபா செலவில் செஞ்சோலைக் கலையரங்கம் என்ற பிரமாண்டமான அரங்கத்தை நிர்மாணித்து வழங்கிய செயல், வெறும் கட்டிடமல்ல அது அன்பின் ஆலயம்! அந்தக் களின் கனவுகளுக்கு ஒரு மேடை அமைத்த மனிதநேயத்தின் சின்னம்!

அவரது செயல்கள் சொல்லாமல் சொல்லும் செய்தி ஒன்று உண்டு: செல்வம் சேர்ப்பது சாதாரணம் அதை மனித நேயத்திற்கு செலவிடுவது தான் உயர்ந்த சாதனை!

தேசப்பற்று அவரது நரம்புகளில் ஓடும் குருதி போல்! மனிதாபிமானம் அவரது இதயத் துடிப்பாக! எங்கு துன்பம் இருக்கிறதோ அங்கே அவரின் உதவி கை கொடுக்கிறது. எங்கு தேவையோ அங்கே அவர் அமைதியாகச் செயல்



படுகிறார். இவ்வளவு சிறப்புகளுடன் மீண்டும் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் திரு கிருஷ்ணகோபால் அவர்கள், இனியும் சங்கத்தின் வழியாக பல்வேறு சமூக நலப் பணிகளை முன்னெடுத்து, தாயக மக்களின் வாழ்வில் ஒளி பாய்ச்சுவார் என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை இம் மகத்தான மனிதரை புகழின் உச்சியில் நிறுத்தி மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவிக்கிறது.

அவரது சேவைப் பாதை மேலும் விரிவடையட்டும்! சங்கத்தின் மனிதநேய ஒளி இன்னும் பல உயிர்களைத் தொட்டெழுப்பட்டும்! வாழ்த்துக்கள்!

T.K. பரமேஸ்வரன் - ஈழநாடு

# தமிழகத் தேர்தல் முடிவுகள்- வெற்றியின் விபரங்கள்



தமிழக தேர்தல் முடிவுகள் வெளியாகி தமிழக மக்களின் தீர்ப்புகளின் வெற்றி விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளது. முதல் முறையாக தமிழக சட்டப் பேரவை தேர்தலில் களம் இறங்கிய தமிழக வெற்றிக்கழகம் 108 இடங் களை கைப்பற்றி புதிய சாதனையை படைத்திருக்கிறது இதனைத் தொடர்ந்து அக்கட்சியின் தலைவரான விஜய் முதல்வராகிறார்.

தமிழ்நாடு, மேற்கு வங்காளம், கேரளம், அசாம், புதுச்சேரி ஆகிய ஐந்து மாநில சட்டப்பேரவைக்கான தேர்தல் கடந்த மே மாதத்தில் மூன்று கட்டங்களாக நடைபெற்று நிறைவடைந்தது. முதலில் பதிவான வாக்குகள் எண்ணும் பணிமே 4ஆம் திகதி நடைபெற்றது.

தேர்தல் ஆணையத்தின் இறுதி முடிவு களின் அடிப்படையில் தமிழக வெற்றி கழகம் - 108 திமுக கூட்டணி- 73 அதிமுக கூட்டணி- 53 இடங்களில் வென்று இருக்கிறது.

திமுக கூட்டணியில் இடம் பெற்ற கட்சிகள் வென்ற இடங்கள் திமுக- 59 காங்கிரஸ் - 5 இந்திய யூனியன் முஸ்லிம் லீக் -2 மார்க்சிஸ்ட் கம்யூ னிஸ்ட் கட்சி -2 இந்திய கம்யூனிஸ்ட் கட்சி - 2 விடுதலை சிறுத்தைகள் கட்சி -2 தேசிய முற்போக்கு திராவிட கழகம்-1

அதிமுக கூட்டணியில் இடம் பெற்ற கட்சிகள் வென்ற இடங்கள். அதிமுக -47 பாட்டாளி மக்கள் கட்சி -4 பாரதிய ஜனதா-1 அம்மா மக்கள் முன்னேற்ற கழகம்-1

இந்தத் தேர்தலில் விஜய் தலைமை யிலான தமிழக வெற்றிக்கழகம் 34.9 சதவீத வாக்குகளும் திமுக 24.1மூ வாக்குகளும் அதிமுக 21.2 சதவீத வாக்குகளும் பெற்றிருக்கிறது.

அதிமுக கூட்டணியில் இடம் பிடித்த பாஜக 2.9 சதவீத வாக்குகளும், திமுக கூட்டணியில் இடம் பிடித்த காங்கிரஸ் கட்சி 3.3 சதவீத வாக்குகளும் பெற்றி ருக்கிறது.

கடந்த தேர்தலில் எட்டு சதவீதத்திற்கு மேற்பட்ட வாக்குகளை பெற்று மாநில கட்சி என்ற அங்கீகாரத்தை பெற்றிரு ந்த சீமான் தலைமையிலான நாம் தமிழர் கட்சி- 234 தொகுதியிலும் தனித்து போட்டியிட்டு வைப்புத் தொகையை இழந்ததுடன் நான்கு சதவீத வாக்குகளை மட்டும் பெற்றிரு க்கிறது.

இதனிடையே புரட்சித் தலைவர் எம்ஜிஆர் சட்டப்பேரவை தேர்தலில் தனித்து களம் இறங்கி வெற்றி பெற்று முதல்வராக பதவியேற்று படைத்த சாதனையை.. பல ஆண்டுகளுக்குப் பிறகு நடிகர் விஜய் தலைமையிலான தமிழக வெற்றி கழகம் 34.9 சதவீத வாக்குகளை பெற்று புரட்சித்தலைவர் எம்ஜிஆரின் சாதனையை மிஞ்சி.. புதிய சாதனையை படைத்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## கட்சிகளின் நிலைப்பாடு!

தவெகவிற்கு ஆதரவு அளிப்பது குறித்து ராகுல் முடிவெடுப்பார் என்று தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

பத்திரிகையாளர்களிடம் பேசிய விடுத லைச் சிறுத்தைகள் தலைவர் தொல் திருமாவளவன், ‘‘நாங்கள் மதச்சார்பற்ற கொள்கையில் உறுதியாக இருக்கி றோம். நாங்கள் திமுக கூட்டணியில் தான் தொடர்கிறோம். விஜயிடம் இருந்து எந்த அழைப்பும் வரவில்லை. அதுபோல எந்தவிதமான திட்டமும் எங்களுக்கு இல்லை.‘‘ என்றார்.

இதே கருத்தை மார்க்சிஸ்ட் கம்யூனி ஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் சண்முகமும், இந்திய கம்யூ னிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் வீர பாண்டியனும் தெரிவித்துள்ளனர். இவர் கள் மற்றும் தேமுதிக மாநிலங்களவை உறுப்பினர் சுதீஷ் ஆகியோர் திமுக தலைவர் ஸ்டாலினைச் சந்தித்துப் பேசினர்.

ஆனால் காங்கிரஸ் கட்சியின் சார்பில் யாரும் திமுக அலுவலகத்திற்கு வர வில்லை. நாங்கள் மதச்சார்பற்ற கூட்டணியில் இருக்கிறோம். விஜயை நான் என்றுமே ‘எங்கள் வீட்டு பையன்‘ என சொல்லி இருக்கிறேன். அவருக்கு எங்கள் வாழ்த்துக்கள்‘‘ என விருத்தா சலத்தில் வெற்றி பெற்ற தேமுதிகவைச் சேர்ந்த பிரேமலதா செய்தியாளர்களிடம் கூறினார்.

# ராஜினாமாச் செய்தார் ஸ்டாலின்

தேர்தலில் தோல்வி அடைந்ததை அடுத்து தமிழக முதலமைச்சர் பதவியை தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் ராஜினாமா செய்துள்ளார். பதவி விலகல் கடித த்தை தமிழக ஆளுநருக்கு அவர் அனுப்பி வைத்துள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனிடையே தமிழக சட்டசபை தேர்தலில் தி.மு.க. 59 இடங்களில் வெற்றி பெற்று எதிர்க்கட்சி அஸ்தஸ்தை பெற்றுள்ளது. இதனை தொடர்ந்து எதிர்க்கட்சி தலை வராக உதயநிதி ஸ்டாலின் நியமிக்கப்படலாம் என தகவல் வெளியாகி உள்ளது. கொளத்தூர் தொகுதியில் போட்டியிட்ட மு.க.ஸ்டாலின் தோல்வி அடைந்த நிலை யில் எம்.எல்.ஏ. வாய்ப்பையும் இழந்தார். துணை முதல்வர் உதயநிதி வெற்றி பெற்றார். நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தோல்வி யடைந்துள்ளார். விஜகாந்த் மனைவி பிரேமலதா வெற்றி பெற்றார்.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போறற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# செய்யறிவு உலகில் செம்மொழித் தமிழும் தமிழரும்! ரொறன்ரோவில் ஒக்டோபர் 15 முதல் 18 வரை மாநாடு!




செய்யறிவு உலகில் செம்மொழித் தமிழும் தமிழரும்' எனும் பெயரிலான ஓர் உலகத் தமிழ் ஆய்வு மாநாடு எதிர்வரும் ஒக்டோபர் 15 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை கனடா நாட்டில் ரொரண்டோ மாநகரில் நடைபெறவுள்ளது. மாநாடு தொடர்பான ஊடக சந்திப்பு யாழ் ஊடக அமையத்தில் நடைபெற்ற போது ஏற்பாட்டாளர்களால் இது தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டது.

இம்மாநாடானது உலகம் முழுவதுமுள்ள அறிஞர்கள் ஆய்வாளர்கள் மற்றும் கல்வியாளர்களை ஒன்றிணைத்துச் செம்மொழித் தமிழ் செய்யறிவு மெய்ப் பொருளியல், பண்பாடு, புலம்பெயர் வாழ்வு, உலகமயமாதல், வரலாறு, பொருண்மிய மேம்பாடு ஆகிய துறைகளின் இணையிசைவுகளை ஆராய்வதற்கான அறிவியற் தளமாக அமைகிறது.

மேலும் தமிழ் அறிவியல் மரபுகளின் வரலாற்று ஆழத்தையும் இன்றைய உலகில் அவற்றின் சமகாலப் பொருத்தத்தையும் வெளிப்படுத்தும் பல்துறை உரையாடல்களை ஊக்குவிப்பதே இம் மாநாட்டின் நோக்கமாகும். மாநாட்டின் ஆய்வு வகைப்பாடுகளாக தமிழும் செய்யறிவும் மெய்ப் பொருளியலும் பண்பாடும் பொருளியல் சிந்தனையும் வாழ்வியலும் தமிழர் வரலாறும் வாழ்வியலும் வடகிழக்குப் பொருண்மிய மேம்பாடு என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆய்வுச் சுருக்கம் 250–300 சொற்களில் அமைதல் வேண்டும் என்பதுடன் தமிழ் அல்லது ஆங்கிலம் மொழியில் அமையலாம் எனவும் தமிழ் மொழியாயின் ஒருங்குறி (Unicode) 12 pt அளவிலும் ஆங்கில மொழியாயின்: Times New Roman 12 pt அளவிலும் அமைய வேண்டும். குறிச்சொற்கள் தரப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆய்வு சுருக்கம் அளிப்பதற்கான கடைசி நாள் எதிர்வரும் மே 25 ஆகும். அதனை அளிப்பதற்கான இணையதளம் www.Global Tamil Conference org ஆகும்.

அளிக்கப்படும் அனைத்து ஆய்வுச் சுருக்கங்களும் மாநாட்டு ஆய்வுக் குழுவினரால் விரிவாக ஆய்வு செய்யப்படும். இந்த ஆய்வின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் ஆய்வுச் சுருக்கங்களை எழுதியோர் ஆய்வுக் கட்டுரை எழுதுமாறு வேண்டப்படுவர். அனைத்து ஆய்வாளர்களுக்கும் அவரவர் ஆய்வுச் சுருக்கத் தேர்வு பற்றிய முடிவு ஜூன் 30 ஆம் திகதிக்குள் அறிவிக்கப்படும்.

முழுமையான ஆய்வுக் கட்டுரைகள் 3000 சொற்களுக்கு மிகாமலும் ஒருங்குறி எழுத்துரு 12 அளவிலும் அமைதல் வேண்டும். இக்கட்டுரைகளை 2026.08.31 ஆம் நாளுக்கு முன் கிடைக்கக் கூடியதாக மேற்குறிப்பிட்ட இணைய தளத்திற்கு அனுப்ப வேண்டும்.

தெரிவு செய்யப்படும் இலங்கை மற்றும் இந்தியக் கட்டுரையாளர்களுக்குக் கனடா சென்று வருவதற்கான வான் வழிச் செலவுச் சீட்டும் கனடாவில் தங்குமிட வசதிகளும் வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

மாநாடு பற்றிய கூடுதல் விளக்கங்களை www.GlobalTamilConference.org என்னும் இணைய தளத்தை பார்வையிடவும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## வெளிநாடு செல்லும் பிக்குகளுக்கு கட்டுப்பாடு!

வெளிநாடுகளுக்குப் பயணம் செய்யும் பௌத்த தேரர்களுக்கு புதிய கட்டாய நடைமுறைகளை இலங்கை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி வெளிநாடுகளுக்குப் பயணம் செய்யும் பௌத்த பிக்குகள், தத்தமது சிரேஷ்ட பிக்கு, பிராந்திய பௌத்த தலைவர் மற்றும் அந்தந்த பீடங்களின் மகாநாயக்க தேரர் ஆகியோரிடமிருந்து பரிந்துரைகளைப் பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக புத்தசாசன பிரதி அமைச்சர் கமகெதர திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தச் சட்டம் முன்னரே இயற்றப்பட்டிருந்தாலும், தற்போது இது கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும்.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மற்றும் தேரர்களுக்கு இடையிலான சந்திப்பிற்குப் பின்னரே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறை மிகவும் அவசியமானது என வலியுறுத்தப்பட்டுள்ளதுடன், மகாநாயக்க தேரர்களுக்கும் இது குறித்து விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

புத்தசாசன அமைச்சின் அதிகாரிகள், பதிவாளர் பதிவு தேரர்கள் மற்றும் சட்ட மா அதிபர் ஆகியோருக்கு இடையே அவசரக் கலந்துரையாடல்கள் நடைபெற்றுள்ளன. அதற்கமைய, பௌத்த தற்காலிக கட்டளைச் சட்டத்தின் 41 மற்றும் 42 ஆவது பிரிவுகளுக்கு அமைய, மகாநாயக்க தேரர்கள் தலைமையிலான குழுவுக்கு இதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் அதிகாரம் வழங்குவது குறித்து ஆலோசிக்கப்பட்டுள்ளது. தாய்லாந்திலிருந்து அண்மையில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு திரும்பிய 22 பௌத்த தேரரகள், பெருமளவிலான போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டமை தெரிந்ததே.



# தையிட்டி விகாரை உள்வீதியை மீட்கும் முயற்சியைக் கை விடு! தவிசாளர் சுகிர்தனை அழைத்து மிரட்டிய பலாலி பொலிசார்

தையிட்டி சட்டவிரோத விகாரை அமைந்துள்ள பகுதிக்குள் காணப்படும் பிரதேச சபைக்கு சொந்தமான வீதியை மீட்கும் நடவடிக்கையை பிரதேச சபை கைவிட வேண்டும் என வலி. வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ.சுகிர்தனை பலாலி பொலிஸார் அழைத்து அச்சுறுத்தும் வகையில் கூறியுள்ளனர்.



தையிட்டி விகாரை அமைந்துள்ள பகுதிக்குள் வலி. வடக்கு பிரதேச சபைக்கு சொந்தமான பவானி வீதி காணப்படுகிறது. குறித்த வீதியினை கடந்த 28ஆம் திகதி தவிசாளர் அடையாளம் காட்டி. அதனை நில அளவையாளர்கள் அளந்து வீதியினை குறித்து இருந்தனர்.

இந்நிலையில் பிரதேச சபைக்கு சொந்தமான குறித்த வீதியினை எதிர்வரும் 11ஆம் திகதிக்கு முன்னர் விடுவிக்க வேண்டும் என வலி. வடக்கு பிரதேச சபை தவிசாளரினால் விகாரதிபதிக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதில் 11ஆம் திகதிக்கு முன்னர் விடுவிக்க வேண்டும் இல்லையெனில் 12ஆம் திகதி பிரதேச சபையினால் வேலி அகற்றப்படும் எனவும் ,அவ்வாறு அகற்றப்பட்டால் , வேலி அகற்ற செலவழிக்கப்பட்ட நிதியை விகாராதிபதியே பிரதேச சபைக்கு செலுத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் பலாலி பொலிஸ் நிலையத்தில் விகாராதிபதி விகாரை வேலியை பிரதேச சபை அடாத்தாக அகற்ற நடவடிக்கை எடுத்துள்ளதாக முறைப்பாடு அளித்துள்ள நிலையில் , அது தொடர்பில் தவிசாளரை பொலிஸார் அழைத்து விசாரணை செய்துள்ளனர். அத்துடன் வேலியை அகற்றினால் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கம் பாதிக்கப்படும் எனவே வேலியை அகற்றும் நடவடிக்கையை கைவிட வேண்டும் எனவும் , மீறி நடவடிக்கை எடுத்தால் சட்ட நடவடிக்கை எடுப்போம் என பொலிஸார் தவிசாளரை மிரட்டும் தொனியில் கூறியுள்ளனர் அதற்கு தவிசாளர் சட்ட நடவடிக்கையை எதிர் நோக்க தான் தயார் எனவும் அது பிரதேச சபைக்கு சொந்தமான வீதி என்பதற்கான ஆவணங்கள் எம்மிடம் உள்ளன. அதன் அடிப்படையிலையே அன்றைய தினம் வீதியை அடையாளம் காட்டி அது அளக்கப்பட்டது. அந்த வீதியை விகாராதிபதி விடுவிக்க வேண்டும். இல்லை எனில் பிரதேச சபையால் வேலிகள் அகற்றப்பட்டு, வீதியை நாம் விடுவிப்போம். அதற்கு எதிராக பொலிஸார் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யுங்கள். நீதிமன்றில் வழக்கை எதிர் கொள்ள தயார் என பொலிஸாருக்கு தவிசாளர் பதிலளித்துள்ளார்.

அதேவேளை கடந்த 28ஆம் திகதி விகாரை அமைந்துள்ள காணிகளை அளக்க முற்பட்ட வேளை ’காணிகளை விடுவிப்பதற்காக தான் அளக்கின்றோம் என கடித தலைப்பில் மாவட்ட செயலரோ பிரதேச செயலரோ உறுதி மொழி தந்தால் தான் காணிகளை அளக்க சம்மதிப்போம் என காணி உரிமையாளர்கள் கூறி அன்றைய தினம் காணிகளை அளவீடு செய்ய சம்மதிக்கவில்லை.

அதன் போது மாவட்ட செயலர் ’காணி உரிமையாளர்களின் நியாயமற்ற கோரிக்கை’ காரணமாக காணி அளவீட்டு பணிகள் கைவிடப்பட்டன என ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்து இருந்தார்.

இந்நிலையில் அன்றைய தினம் பிரதேச சபை தவிசாளர் வீதியை அடையாளம் காட்டி அதனை அளவீடு செய்ய சம்மதித்த நிலையில் , வீதி அளக்கப்பட்டது. இந்நிலையிலையே தற்போது விகாராதிபதி வீதியை கையளிக்க முடியாது என்ற நிலைப்பாட்டில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கனடியத் தமிழர் வவுனியாவில் மரணம்

வவுனியாவில் தற்காலிகமாக வசித்து வந்த கனடா நாட்டுப் தமிழ்ப்பிரஜை ஒருவர், திடீர் உடல்நலக்குறைவால் உயிரிழந்துள்ளார். தனியார் வைத்திய சாலையில் சிகிச்சைப் பெற்று வந்த நிலையில் சிகிச்சைப் பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

கனடா, டொரன்ரோ பகுதியைச் சேர்ந்த 72 வயதுடைய மனோகரன் பொன்னையா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவர் வவுனியா, உக்கிளாங்குளம் பகுதியில் தற்காலிகமாக தங்கியிருந்துள்ளார். வவுனியா நகர் நோக்கி வாடகை வாகனம் ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்த போது அவருக்கு திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டுள்ளது.

இதனை அவதானித்த வாகன சாரதி, உடனடியாக அவரை பட்டானிச்சூர் பகுதியில் அமைந்துள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் அனுமதித்துள்ளார். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சில நிமிடங்களிலேயே, சிகிச்சைப் பலனின்றி அவர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.


SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

# அரசியல் கட்சிகளால் சூறையாடப்பட்டுள்ள தொழிலாளர் தினம்!



இன்னொரு மே தினமும் வந்து போய் விட்டது. இது தான் சர்வதேச தொழிலாளர் தினம் என்பது மறக்கப்பட்டு அல்லது மறைக்கப்பட்டு மே மாதத்தின் முதல் நாள் மே தினம் என்றவாறாக மாற்றப்பட்டு விட்டது. இலங்கையைப் பொறுத்தவரை தொழிலாளர் தினம் என்ற மே முதலாம் நாள் அரசியல் கட்சிகள் தங்களுக்கான ஆட்பலத்தைக் காட்டவும், கூட்டவும் ஆக்கிவிட்டன என்பதுவே வரலாறாகி வருகிறது.

1886ம் ஆண்டு மே மாதம் 1ம் திகதி தொழிலாளர்கள் தங்களுக்கு எட்டு மணி நேர பணியைக் கோரி போராட்டம் சிக்காகோவில நடத்தி வெற்றி பெற்றனர். உலகளாவிய சோசலிச – மார்க்சிஸ சக்திகள் இந்த நாளை நிலைநாட்டும் முகமாக 1889ல் தொழிலாளர் தினமாக பிரகடனம் செய்து அனைவருக்கும் விடுமுறை நாளாக்கியது.

இந்த வரலாறு இன்று மே தினம் என்று கொண்டாடுபவர்களில் எவ்வளவு பேருக்கு தெரிந்திருக்கும்? இலங்கையின் முன்னைய சகல அரசாங்கங்களிலும் தொழில் அமைச்சரென தனியொருவர் இருப்பார். மே மாதம் முதலாம் திகதி ஊடகங்களில் ,வரது தொழிலாளர் தின செய்தி வாழ்த்தாக வெளிவரும். இப்போது தனியாக தொழில் அமைச்சர் என்று எவரும் இல்லை. தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு என்று பெயரிடப்பட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. ,தனால் உள்நாட்டு தொழிலாளர் நலன், அவர்களின் தொழில் பாதுகாப்பு, சம்பள உயர்வுக்கான உத்தரவாதம் என்பதெல்லாம் இரண்டாம் பட்சமாகி விட்டது. தொழிலாளர் தினம் என்பது காணாமல் போய், அரசியல் கட்சிகளுக்கான ஆட்சேர்ப்பு நாளாக இது மாற்றப்பட்டு விட்டது.

சில வருடங்களுக்கு முன்னர் ஜே.வி.பி. தனது மே தினத்தை யாழ்ப்பாணத்தில் கொண்டாடியது. ,தன் தலைவர்கள் தங்கள் பட்டாளங்களுடன் செஞ்சட்டை அணிந்து கொடிகளை ஏந்தியவாறு வீதி வழியாக கோசத்துடன் சென்றனர். இந்த ஊர்வலத்தில் தமிழரசுக் கட்சி எம்.பியாகவிருந்த சுமந்திரனும் முன்வரிசையில் கலந்திருந்தார். இந்த ஊர்வலத்தின் அறுவடையாக ஜே.வி.பி.யின் மறுவடிவமான தேசிய மக்கள் சக்தி கடந்த பொதுத்தேர்தலில் மூன்று எம்.பிக்களை முதல்முறையாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பெற்றது. இது மே தினத்துக்கான இன்னொரு வரலாறு.

இதனை எழுதும் போது 1960–70களில் தமிழர் தாயகத்தில் இடம்பெற்ற தொழிலாளர் தின ஊர்வலங்கள் நினைவுக்கு வருகின்றன. அப்போது தமிழர் மத்தியில் தமிழரசுக் கட்சி, தமிழ் காங்கிரஸ், சீன கம்யுனிஸ்ட் கட்சி ஆகியவையே தொழிலாளர் தின கொண்டாட்டங்களை இங்கு நடத்தின. இவை ஒன்றுடன் ஒன்று மோதாத வகையில் இவைகளின் ஊர்வலத்துக்கான பாதைகளும், கூட்டத்துக்கான இடங்களும் பொலிசாரால் நிர்ணயிக்கப்படும்.

சீன கம்யுனிஸ்ட் கட்சியின் ஊர்வலங்கள் எப்போதும் கவர்ச்சியாகவும், நேர்த்தியாகவும் இருக்கும். மிக அதிகமானோர் இதிலேயே பங்குபற்றுவர். இப்பத்தி எழுத்தாளர் ஓர் ஊடகர் என்ற வகையில் இதனை செய்தியாக எழுதியதுண்டு. இந்த ஊர்வலங்களில் ஒலிபெருக்கி மூலம் முழங்கப்படும் சுலோகங்கள் பார்ப்போரை சுண்டியிழுப்பதாக அமைந்திருக்கும்.

ஊர்வலத்தின் முன்வரிசையில் செல்பவர் ஒலிவாங்கியில் சுலோகத்தின் முதல் இரு வரிகளைச் சொல்ல பின்னால் செல்பவர்கள் மிகுதி இரு வரிகளையும் வானதிரச் சொல்வர். சமகால அரசியல், மக்கள் வாழ்வியல் சம்பந்தப்பட்டவையாக ,வை அமைந்திருப்பதால் பெரும் கூட்டம் இதனைக் கேட்பதற்கு வீதிகளில் கூடியிருக்கும்.

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் தமிழ்க் காங்கிரஸ் அலுவலகத்துக்கு முன்னால் ஊர்வலம் செல்லும் போது முன்னால் செல்பவர் – விண்ணன் பொன்னன் – என்று சொல்ல, பின்னால் செல்பவர்கள் – பண்ணினதென்ன என்று முடிப்பர். தமிழ் காங்கிரஸ் கட்சியின் ஆதரவாளர்கள் கூட ரசிப்பதாகவே ,து அமைந்திருக்கும்.

தேநீர் கடைகளின் முன்னால் ஊர்வலம் செல்லும் போது போகட்டும் போகட்டும் என்று முன்னால் செல்பவர் சொல்ல, பின்னால் செல்பவர்கள் போத்திலும் பேணியும் என்பர். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு போத்திலிலும், உடைந்த பேணிகளிலும் தேநீர் வழங்குவதை கண்டிக்கும் சுலோகம் இது.

இவ்வாறு பெயர் பெற்ற சீனக் கம்யுனிஸ்ட் கட்சியின் இயங்கு தலைவராக நீண்டகாலம் இருந்தவர் (அமரர்) கே.ஏ.சுப்பிரமணியம். இவருக்குச் சவாலாக அமைந்தது 1969ம் ஆண்டு தொழிலாளர் தினம். இதே தினத்தில் பௌத்தர்களுக்கான வெசாக் தினமும் வந்ததால், அப்போதைய ஐக்கிய தேசிய கட்சி அரசின் பிரதமர் டட்லி சேனநாயக்க தொழிலாளர் தினத்தை மே மாதம் 2ம் திகதி என்று பிரகடனம் செய்தார். சிங்கள கட்சிகள் மட்டுமன்றி டட்லியின் தேசிய அரசை ஆதரித்து வந்த தமிழரசுக் கட்சியும், தமிழ் காங்கிரசும் கூட ,தனை ஏற்றுக் கொண்டன. ஆனால், சீனக் கம்யுனிஸ்ட் கட்சி மட்டும் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

எவ்வாறாயினும், மே மாதம் முதலாம் திகதி தொழிலாளர் தினம் யாழ்ப்பாணத்தில் இடம் பெறுமென இக்கட்சியின் தலைவர் கே.ஏ.சுப்பிரமணியம் அறிவித்திருந்தார். அப்போது வட மாகாண பொலிஸ் அதிபராக ஆர். சுந்தரலிங்கம் பணியாற்றிக் கொண்டிருந்தார். பொதுமக்களோடும், ஊடகங்களோடும் நல்லுறவு பேணியவராக இவர் இருந்தும் சீனக் கம்யுனிஸ்ட் கட்சியினரின் தொழிலாளர் தின ஏற்பாடுகள் பற்றி எதனையும் இவரால் கண்டறிய முடியவில்லை.

இக்கட்சி அக்காலத்தில் சங்கானையில் நிற்சாமம் என்ற இடத்திலும், கொடிகாமத்தில் மந்துவிலிலும், சுன்னாகத்திலும் வலுப் பெற்றிருந்தது. இதனால் இவ்விடங்களிலேயே தொழிலாளர் தின நிகழ்வு இடம்பெறலாம் என்ற சந்தேகத்தில் வேறு மாகாணங்களிலிருந்தும் கொண்டு வரப்பட்ட பொலிசார் பெருமளவில் குவிக்கப்பட்டிருந்தனர். யாழ்.நகர் பகுதியில் பொலிஸ் கண்காணிப்பு குறைவாகவே இருந்தது.

அன்றைய தினம் பிற்பகல் சுமார் ஐந்து மணியளவில் யாழ்ப்பாணம் ராஜா தியேட்டரிலும் அதன் முன்னாலுள்ள வின்சர் தியேட்டரிலும் பகல் இரண்டு மணி படக்காட்சி (மெட்னி ஷோ) முடிந்து வெளியே வந்த ஆயிரக்கணக்கானோர் திடீரென தங்கள் ஆடைகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த கைக்குட்டைகள் அளவான சிவப்புத் துணிகளை உயர்த்திப் பிடித்தவாறு, கோசங்கள் எழுப்பிக் கொண்டு தொழிலாளர் தின ஊர்வலத்தை ஆரம்பித்து அனைவருக்கும் அதிர்ச்சி கொடுத்தனர்.


கே.ஏ.சுப்பிரமணியம் எங்கிருந்து வந்தாரோ தெரியாது, ஊர்வலத்தின் முன்னால் பாரிய பதாதையுடன் ஓட்டமாகச் செல்ல, ஊர்வலத்தினர் சிவப்புக் கொடிகளை ஏந்தியவாறு அவரின் பின்னால் நகரின் மையப் பகுதிக்குள் நுழைந்தனர். சில நிமிடங்களில் மலாயன் கபேயைத் தாண்டி முட்டாசுக் கடை சந்தியூடாக முற்றவெளியை நோக்கி அண்மிக்கையில் வாகனங்களில் கொண்டு வரப்பட்ட பொலிசார் இறக்கப்பட்டனர். அவர்களின் குண்டாந்தடித் தாக்குதலால் ஊர்வலத்தின் ஒரு பகுதி சிதறியது. இந்தத் தாக்குதலில் திரு. சுப்பிரமணியம் மோசமாகக் காயப்பட்டு யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டாராயினும் பொலிஸ் காவலிலேயே வைக்கப்பட்டிருந்தார்.

அதேசமயம், தங்களுடைய குறியை ஊர்வலகாரர் மறந்து விடவில்லை. நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவிலை நோக்கிச் சென்ற இவர்கள் அங்கு சிறு கூட்டம் நடத்தி உரையாற்றி விட்டு, தொழிலாளர் தின பிரகடனத்தை வாசித்தபின் கலைந்தனர். இந்த நிகழ்வு, அன்றைய டட்லி சேனநாயக்க அரசுக்கும், பௌத்த மத பக்தர்களுக்கும் ஒரு பாடமாக அமைந்தது. இலங்கை ஊடகங்களை விட ,ந்திய ஊடகங்கள் இதற்கு அதிமுக்கியத்துவம் கொடுத்திருந்தன. பி.பி.சி. மும்மொழிகளிலும் இச்செய்திக்கு அன்றிரவு பிரபல்யம் கொடுத்தது.

**கட்டுரையாளர்:-**
**பனங்காட்டான்**

இதனை விபரமாக இங்கு குறிப்பிடுவதற்கு ஒரு காரணம் உண்டு. இந்த வருடமும் வெசாக் வாரத்திலேயே தொழிலாளர் தினமும் அமைந்தது. ஐக்கிய மக்கள் சக்தியின் மே தின நிகழ்வில் தங்களோடு இணையுமாறு அதன் தலைவரான சஜித் பிரேமதாச, ஐக்கிய தேசிய கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சில தினங்களுக்கு முன்னர் பகிரங்க அழைப்பு விடுத்திருந்தார்.

இந்த அழைப்பை நிராகரித்த ரணில், இதற்குத் தெரிவித்த காரணம் பின்வருமாறு: 'ஐக்கிய நாடுகள் சாசனத்தின்படி ,ன்று வெசாக் தினம் அனுக்ஷ்டிக்கப் படுகிறது. இதனால் இப்பிரதேசத்திலுள்ள பல நாடுகள் மே முப்பதாம் திகதியில் தொழிலாளர் தினத்தை அனுக்ஷ்டிக்கின்றன. ஐக்கிய தேசிய கட்சியும் அவ்வாறே' என்று சஜித்




பிரேமதாசவுக்கு அனுப்பிய பதிலில் ரணில் சுட்டியுள்ளார்.

1969ல் தொழிலாளர் தினத்தை மே மாதம் 2ம் திகதிக்கு மாற்றிய டட்லி சேனநாயக்கவின் ஐக்கிய தேசிய கட்சியின் இன்றைய தலைவர் ரணில் விக்கிரமசிங்க என்பதை சொல்லித் தான் தெரிய வேண்டுமென்றில்லை. மதம் பிடித்த அந்த அரசியல் போக்கு இன்றும் அவ்வாறே தான்.

# 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! மே மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள். அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

15 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் – உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை – நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் – மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக – எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை – மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

”தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

02 மே 2026 முதல் 15 மே 2026 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ் வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 18வது ஆண்டு நினைவஞ்சலி



### சட்டத்தரணி சின்னத்தம்பி நாகராஜா

யாழ்.கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வதிவிடமாகவும் கொண்டிருந்த முன்னாள் யாழ்மாநகரசபை முதல்வர் சட்டத்தரணி சின்னத்தம்பி நாகராஜா அவர்களது 18வது ஆண்டு நினைவு நாள் 08 மே 2026வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு, பாரதி, செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சின்னத்தம்பி நாகராஜா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு, பாரதி, செஞ்சோலை இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 12வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி மனோண்மணி பாலசுந்தரம்

கிழக்கிலங்கை கோமாரியைப் பிறப்பிடமாகவும் திருக்கோவிலை வதிவிடமாகவும் கொண்டிருந்த இளைப்பாறிய முன்னாள் ஆசிரியை திருமதி மனோன்மணி பாலசுந்தரம் அவர்களது 12வது ஆண்டு நினைவு நாள் 29 ஏப்ரல் 2026 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி மனோன்மணி பாலசுந்தரம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திருமதி இராசையா ருக்மணி

கரம்பன் தெற்கு ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த ரூபா என்று அன்பாக அழைக்கப்படும் திருமதி இராசையா ருக்மணி அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 09 மே 2026 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள் திருமதி இராசையா ருக்மணி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 31ம்நாள் நினைவஞ்சலி



### திருமதி தம்பிராஜா பரமேஸ்வரி

புங்குடுதீவு 3ம்வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தம்பிராஜா பரமேஸ்வரி அவர்களது நினைவழியா நினைவுகளோடு அன்னாரது குடும்பத்தினர் அவரது 31ம்நாள் நினைவுநாள் 15 மே 2026 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு, செஞ்சோலை பாரதி ஆகிய 3 இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள் திருமதி தம்பிராஜா பரமேஸ்வரி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு, பாரதி, செஞ்சோலை இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 60வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கனகசபை பாலசிங்கம்

புங்குடுதீவு 3ம் வட்டாரம் குறிகாட்டுவானைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த பொறளை பாலன் என்று அன்பாக அழைக்கப்படும் திரு கனகசபை பாலசிங்கம் அவர்களின் 60வது ஆண்டு நினைவுநாள் 16 மே 2026 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு கனகசபை பாலசிங்கம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 5வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி குலோறி செல்வநிதி தவரட்ணம்

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி குலோறி செல்வநிதி தவரட்ணம் அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாள் 10 மே 2026 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி குலோறி செல்வநிதி தவரட்ணம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



05 மே 2026 செவ்வாய்க்கிழமை அளவெட்டியைச் சேர்ந்த ஜனா என்று அன்பாக அழைக்கப்படும் திரு ஐங்கரன் யோகசுந்தரம் அவர்களது 37வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



08 மே 2026 வெள்ளிக்கிழமை யாழ்.கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த யாழ்ப்பாண முன்னாள் மேயர் சட்டத்தரணி சின்னத்தம்பி நாகராஜா அவர்களது 18வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



08 மே 2026 வெள்ளிக்கிழமை யாழ்.கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த யாழ்ப்பாண முன்னாள் மேயர் சட்டத்தரணி சின்னத்தம்பி நாகராஜா அவர்களது 18வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



08 மே 2026 வெள்ளிக்கிழமை யாழ்.கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த யாழ்ப்பாண முன்னாள் மேயர் சட்டத்தரணி சின்னத்தம்பி நாகராஜா அவர்களது 18வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



09 மே 2026 சனிக்கிழமை கரம்பன் தெற்கு ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த ரூபா என்று அன்பாக அழைக்கப்படும் திருமதி இராசையா ருக்மணி அவர்களது 31ம்நாள் நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



10 மே 2026 ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி செல்வநிதி குலோறி தவரெட்ணம் அவர்களது 5வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



11 மே 2026 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி பாலா பவானி தம்பதிகளின் செல்வப்புதல்வன் சாகித்தியன் பாலா அவர்களது 30வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் சாகித்தியன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




11 மே 2026 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி பாலா பவானி தம்பதிகளின் செல்வப்புதல்வன் சாகித்தியன் பாலா அவர்களது 30வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் சாகித்தியன் தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



11 மே 2026 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி பாலா பவானி தம்பதிகளின் செல்வப்புதல்வன் சாகித்தியன் பாலா அவர்களது 30வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் சாகித்தியன் தனது பெற்றோர்களுடன் இணைந்து செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




11 மே 2026 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் Shakeela Faizi அவர்களது இனிய பிறந்த நன்நாளாகும். (Happy Birthday) அன்றையதினம் அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



13 மே 2026 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கோனேஸ்வரன் சுதர்சினி தம்பதிகளின் செல்வப்புதல்வி சௌமியா கோனேஸ்வரனின் 23வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி சௌமியா தனது பெற்றோர்கள் சகோதரங்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



13 மே 2026 புதன்கிழமை கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு ஸ்ரீரங்கநாதன் கந்தசாமி அவர்களது 6வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



15 மே 2026 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தம்பிராஜா பரமேஸ்வரி அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



15 மே 2026 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தம்பிராஜா பரமேஸ்வரி அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



15 மே 2026 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தம்பிராஜா பரமேஸ்வரி அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

# சமாதானத்துக்காக நடக்க ஒரு நாடு! நடக்காமல் விட ஒரு நாடு?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -

அமெரிக்காவிலிருந்து 13 பிக்குகளைக் கொண்ட ஓர் அணி இலங்கை க்கு வந்தது.சமாதானத்துக்கான நடை என்ற பெயரில். அவர்கள் இலங்கையில் அனுராதபுரத்தில் இருந்து கொழும்பு வரையிலும் சுமார் 200 கிலோ மீட்டர்கள் நடந்திருக்கிறார்கள். ஏப்ரல் மாசம் 21 ஆம் திகதியில் இருந்து மே மாசம் முதலாம் திகதி வரையிலுமான அவர்களுடைய இந்த நடைப்பயணத்தின் போது அவர்கள் தமிழ்ப் பகுதிகளுக்கு வரவில்லை.

தென்னிலங்கையில் பௌத்தர்களாக உள்ள சிங்கள மக்கள் அவர்களை காலில் விழுந்து வரவேற்கிறார்கள். அவர்கள் செல்லும் வழியெல்லாம் மலர்களை தூவி அவர்களுக்காக காத்திருந்து ஆசிர்வாதங்களை பெறுகிறார்கள். உடல் வழங்காதவர்களையும் நோயில் இருப்பவர்களையும் சக்கர நாற்காலிகளில் இருத்தி அந்த பிக்குகள் நடந்து வரும் வழியில் கொண்டு வந்து நிறுத்தி ஆசிர்வாதங்களைப் பெறுகிறார்கள். நடந்து வரும் பிக்குகளை சிங்கள பௌத்த மக்கள் வரவேற்கும் விதம் ஒரு வழிபாடு தான். அதேசமயம் அரசாங்கம் அதை ஒரு கவர்ச்சியான பக்தி அரசியல் நாடகமாக ஒழுங்கமைத்தது என்ற விமர்சனங்களும் உண்டு

அந்த பிக்குகளுக்கு தலைமை தாங்குபவர் பண்ணகார தேரோ. வியட்நாமில் பிறந்து பின் அமெரிக்காவில் குடியேறியவர். மோட்டோரோலா நிறுவனத்தில் மென்பொருள் பொறியியலாளராக இருந்தவர். பின்னர் சன்னியாசம் பூண்டு பிக்குவானவர். இலங்கையில் ஒரு பெண் அவரிடம் கேட்கிறார் புத்த பகவானின் போதனைகளின் சாராம்சம் என்ன? வென்று. அவர் மிகத்தெளிவாகச் சொல்கிறார். "பௌத்தம் ஒரு மதம் அல்ல. அது ஒரு வாழ்க்கை முறை என்று.

உண்மை.அது அமெரிக்காவிலிருந்து நடைபயணத்தை முன்னெடுத்த அந்த பிக்குகளுக்குப் பொருந்தலாம்.

இலங்கைத் தீவின் எல்லாச் சிங்கள பௌத்தர்களுக்கும் பொருந்துமா?

உலகில் தேரவாத பௌத்தத்தின் ஒரே சேமிப்பிடமாகக் கொண்டாடப்படும் இலங்கைத் தீவில் பல நூற்றாண்டுகளாக பௌத்தம் ஒரு வாழ்க்கை முறையாக இருக்கிறதா? அல்லது அரச மதமாக இருக்கிறதா?

புத்த பகவான் இளம் வயதிலேயே அரச போகங்களையும் இல்லறச் சுகங்களையும் துறந்து சன்னியாசி ஆகியவர். அவ்வாறு அரச போகங்களைத் துறந்த அகிம்சா மூர்த்தியின் வாழ்க்கையைப் பின்பற்றுகிறவர்கள் எப்படி பௌத்தத்தை அரச மதமாகப் பயில முடியும்?

இலங்கைத் தீவின் பௌத்த மகா பீடங்களைச் சேர்ந்த முக்கிய பொறுப்புகளில் இருக்கும் பிக்குகள் எத்தனை பேர் இப்படி சமாதான நடை நடந்திருக்கிறார்கள்? அவர்கள் பயன்படுத்தும் சொகுசு வாகனம் அவர்கள் அமர்ந்திருக்கும் சிம்மாசனம் அவர்களுடைய வாழ்க்கை முறை அவர்களுடைய அரசியல்.. என்பவற்றைத் தொகுத்துப் பார்த்தால் அதில் எங்கே சன்னியாசம் இருக்கிறது?

இலங்கைத் தீவின் சிங்கள பௌத்தர்கள் புத்தரின் போதனைகளை ஒரு வாழ்க்கைமுறையாகப் பின்பற்றி இருந்திருந்தால் இலங்கைத் தீவில் இனப்பிரச்சினை தோன்றியிருக்காது. தமிழின அழிப்பு நடந்திருக்காது. முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறைகள் முன்னெடுக்கப்பட்டிருந்திருக்காது. இலங்கைத் தீவில் மிகப் பிழையாக விளங்கிக் கொள்ளப்பட்ட விடயங்களில் ஒன்று பௌத்தம்.

இவ்வாறு அரச மதமாக அரச போகங்களை அனுபவிக்கும் ஒரு மதப் பிரிவாக, அரசியலமைப்பில் ஏனைய மதங்களை விடவும் விசேஷமான முன்னுரிமைகளை அனுபவிக்கும் ஒரு மதமாகக் காணப்படும் இலங்கைத்தீவின் தேரவாத பௌத்தமானது, ஒரு வாழ்க்கை முறையாக இல்லை என்பதற்கு இதுவரையிலும்



தீர்க்கப்படாத இனப்பிரச்சினையே ஓர் உதாரணமாகும்.

சமாதானத்துக்கான நடை பயிலும் அந்த பிக்குகளை சாதாரண சிங்கள மக்கள் வழிபடுகிறார்கள்.உயர்வாகப் போற்றுகிறார்கள். கொண்டாடுகிறார்கள். அந்த பிக்குகளின் கால்களை பிடித்துக் கொண்டு அழுகிறார்கள். சன்னியாசிகள் சாந்த சொரூபிகளாக நடை பயிலும் போது அவர்களை சிங்கள பௌத்தர்கள் மதிப்பார்கள் என்பதை அது காட்டுகிறதா? உண்மையான சன்னியாசிகள் உபதேசித்தால், உண்மையான சிங்கள பௌத்தர்களின் மனதில் மாற்றங்களை விதைக்கலாம் என்பதை அது காட்டுகிறதா?

13 பிக்குகளோடு ஒரு நாயும் சேர்ந்து வருகிறது. அது இந்தியாவில் ஒரு தெரு நாயாக இருந்தது. இந்த பிக்குகளோடு அதுவும் சேர்ந்து நடக்கத் தொடங்கியது. அது ஒரு வாகன விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்ற பின்னரும் தொடர்ந்து நடந்து வருகிறது. அதற்கு அலோக்கா என்று பெயர்.அ லோக்கா என்றால் ஒளி என்று பொருள்.

சமாதானத்துக்காக ஏன் நடக்க வேண்டி வருகிறது? ஏனென்றால் சமாதானம் இல்லாத போது அல்லது மோதல்கள் முரண்பாடுகள் உள்ள போது அல்லது மோதல்களுக்கான காரணங்கள் தொடர்ந்தும் பேணப்படும் போது, அங்கே சமாதானத்துக்காக நடக்க வேண்டி வருகிறது.

பிக்குகள் சமாதானத்துக்காக நடப்பது என்பது பௌத்த பண்பாட்டில் புதியது அல்ல. அது அவர்களுடைய தவத்தின் ஒரு பகுதி தியானத்தின் ஒரு பகுதி. கம்பூச்சியாவில் யுத்தம் நடந்து கொண்டிருந்த காலத்திலேயே யுத்த பிரதேசத்துக்குள்ளேயே புத்த பிக்குகள் உயிரைத் துச்சமாக மதித்து நடத்தீருக்கிறார்கள். அது போலவே இலங்கைத் தீவிலும் முதலாம் கட்ட ஈழப்போர் காலத்தில் யாழ்ப்பாணத்தின் தெருக்களில் சில யப்பானிய பிக்குகள் நடந்து திரிந்தார்கள். யாரோடும் உரையாடாமல் கைகளில் வைத்திருந்த ரபானை மெல்லத் தட்டியபடி யாழ்ப்பாணத்தின் குச்சொழுங்கைகள் தோறும் நடந்து திரிந்தார்கள். அவர்களில் ஒருவர் 1984.மார்ச் மாதம் யாழ்ப்பாணம், மத்தியூஸ் வீதிச் சந்தியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். கடந்த ஆண்டு மார்ச் மாதம் அவருடைய அமைப்பைச் சேர்ந்தவர்களும் உறவினர்களும் அவர் கொல்லப்பட்ட இடத்தில் 41 ஆண்டுகளின் பின் அவரை நினைவு கூர்ந்தார்கள்.

யாழ்ப்பாணம்.மத்தியூஸ் வீதிச் சந்தி, 2025

1980களின் முற்பகுதியில் சமாதானத்துக்காக யப்பானிய பிக்குகள் நடக்கத் தொடங்கியதில் இருந்து 2006லும் அதாவது கிட்டத்தட்ட நான்கு தசாப்தங்களின் பின்னரும் அவ்வாறு நடக்க வேண்டியிருக்கிறது. தேரவாத பௌத்தத்தின் ஒரே சேமிப்பிடம் என்று வர்ணிக்கப்படும் ஒரு தீவில் கிட்டத்தட்ட 40 ஆண்டுகளாக பௌத்த பிக்குகள் நடந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் சமாதானம் அவர்கள் நடந்து சென்றடையும் தூரத்தில் இல்லை என்பதைத்தான் தையிட்டி விகாரை விவகாரம் உணர்த்துகின்றதா?

இந்த சமாதானத்துக்கான நடை வடக்கு கிழக்கிற்கு வரவில்லை. பெருமளவுக்கு தென்னிலங்கையில் உள்ள பௌத்த ஆலயங்களை நோக்கித் தான் அந்த நடை நடந்திருக்கிறது. ஏன் அவர்கள் வடக்குக் கிழக்குக்கு வரவில்லை?

இலங்கைத் தீவில் சமாதானத்துக்காக நடக்க ஒரு நாடு, நடக்காமல் விட ஒரு நாடு என்று இரண்டு நாடுகள் உண்டா? அல்லது அதற்கு வேறு காரணங்கள் உண்டா?

சமாதானத்துக்கான கூட்டு உளவியலைத் தயார்படுத்தும் வேலைகளை தெற்கிலிருந்து தான் தொடங்க வேண்டும் என்று பிக்குகள் சரியாகவே கணித்திருக்கிறார்களா?

2014ஆம் ஆண்டு நான் நோர்வேக்குச் சென்றிருந்த போது அங்கே ஒரு குறிப்பிட்ட புரொடஸ்தாந்து கிறிஸ்தவப் பிரிவின் முக்கியஸ்தரைச் சந்தித்தேன். அவருடைய ஆலயம் தமிழ் தஞ்சம் கோரிகளில் ஒரு பகுதியினருக்கு புகலிடமாக இருந்தது என்று கூறப்பட்டது. அவருடனான உரையாடலின் போக்கில் ஒரு கட்டத்தில் அவர் என்னிடம் கேட்டார். ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியோடு இலங்கையில் சமாதானத்தை ஸ்தாபிப்பதற்கான முன்னெடுப்புகளை எந்த மதப்பிரிவின் ஆலயங்களில் இருந்து ஆரம்பிக்கலாம்? என்று.

அவருக்கு நான் சொன்னேன் அதை பௌத்த ஆலயங்களில் இருந்து தொடங்குவது பயன் பொருத்தமாக, நடைமுறைச் சாத்தியமானதாக இருக்கும் என்று. ஏனென்றால், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பௌத்த ஆலயங்களில் பிரசங்கம் செய்யும் பிக்குகள் நினைத்தால் சமாதானத்துக்கான கூட்டு உளவியலை தயார்படுத்தி இருந்திருக்கலாம். மாறாக ஒரு இனத்தினுடையதும் ஒரு மதத்தினுடையதும் மேலாண்மையை ஆதரிக்கும் பிரசங்கங்கள் தான் அங்கே அதிகமாக நடக்கின்றன என்று கூறப்படுகிறது. எனவே எங்கிருந்து இன.மத.மொழிப் பல்வகைமைக்கு எதிரான கருத்துக்கள் உற்பத்தி செய்யப்படுகின்றனவோ, அங்கிருந்துதான் சமாதானத்துக்கான பெரு விருப்பையும் திடசங்கற்பத்தையும் உற்பத்திசெய்ய வேண்டும்.எனவே தெற்கில் சமாதான நடை நடந்ததில் ஒரு பொருத்தம் உண்டு.

அதேசமயம் அவர்கள் தெற்கிலிருந்து வடக்கிற்கு குறிப்பாக தையிட்டிக்கு ஒரு நடை நடந்து வந்திருந்திருந்தால் இலங்கைத்தீவில் ஏன் சமாதானம் ஏற்படவில்லை என்பதற்கான ஆகப்பிந்திய காரணத்தை கண் கூடாகக் கண்டிருப்பார்கள்.

ஒருபுறம் தெற்கில் சமாதானத்துக்கான நடை. அங்கே அன்பும் கருணையும் பக்தியும் பெருகியோடுவதாக சிங்கள ஊடகங்களில் சித்தரிக்கப்படுகிறது. இன்னொரு புறம் கட்டுநாயக்கா விமான நிலையத்தில், ஒரு தொகுதி பிக்குகள் போதைப் பொருட்களோடு கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

அதேநேரம் வடக்கில்.உயர் பாதுகாப்பு வலையத்தின் பாதுகாப்பு நிழலில் கட்டப்பட்டிருக்கும் ஒரு விகாரை அமைந்திருக்கும் காணிகளின் சொந்தக்காரர்கள் நீதி கிடைக்காமல் தொடர்ந்தும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். சமாதானம் நடந்து வந்த நாடும், நடந்து வராத நாடும்?

# மத்தள விமான நிலையத்தை வசப்படுத்துமா அமெரிக்கா?

கட்டுரையாளர்: தமிழகத்தில் இருந்து கேணல் ஹரிகரன்






மத்தள மஹிந்த ராஜபக்ஷ விமான நிலையத்தை முப்பது ஆண்டுகளுக்கு, வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் மீண்டும் அறிவிப்பை வெளியிட்டிருக்கிறது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள், நிறுவனங்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம் என அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வருவதற்கு முன்னர், மத்தள விமான நிலையத்தை இந்திய- ரஷ்ய நிறுவனங்கள் கூட்டாக அபிவிருத்தி செய்வதற்கு விருப்பம் வெளியிட்டிருந்தன.

அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த தருணத்தில் அமெரிக்கத் தூதுவராக இருந்த ஜூலி சங் அதனை தடுத்து நிறுத்தியிருந்தார். மத்தள விமான நிலையத்தில் முதலீடு செய்யவுள்ள ரஷ்ய நிறுவனம், அமெரிக்காவினால் தடை செய்யப் பட்டது என அவர் எழுப்பிய பிரச்சினையை தொடர்ந்து தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அந்த கூட்டு முயற்சி உடன்பாட்டை செயற்படுத்துவதில் இருந்து விலகிக் கொண்டது.

அம்பாந்தோட்டை பிரதேசத்தில் இந்தியா காலடி எடுத்து வைப்பது அமெரிக்காவுக்கு பிரச்சினைக்குரிய விடயம் அல்ல. இந்திய நிறுவனத்துக்கு பின்னால் ஒளிந்து கொண்டு ரஷ்யா முதலீடு செய்ய முன்வருவதை அமெரிக்காவினால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்பதுதான் உண்மை.

அதனாலேயே அந்த முதலீட்டு முயற்சி தடுக்கப் பட்டது. சீனாவின் கடனுதவியில் கட்டப்பட்ட மத்தள விமான நிலையம் இலங்கைக்கு சுமையாகவே இருந்து வருகிறது. 'வெள்ளை யானைத் திட்டம்' என வர்ணிக்கப்படும் இந்தத் திட்டம், இலங்கைக்கு பல தசாப்தங்களாக நெருக்கடியை கொடுத்து வருகிறது.

இந்த விமான நிலையத்தினால் கடந்த 5 ஆண்டுகளில் அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ள மொத்த நட்டம் 38.5 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமாகும். இந்த தொடர் இழப்பை தவிர்க்க வேண்டுமானால் விமான நிலையத்தை வெற்றிகரமாக இயக்க வேண்டும். அதற்கான சாத்தியங்கள் அறவே இல்லை என்பது உறுதியாகி விட்டது.

மஹிந்த ராஜபக்ஷ தொடக்கம் அவருக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த எல்லா ஆட்சியாளர்களுமே இதற்கான முயற்சிகளை எடுத்தார்கள். இடையில் ஒரு குறிப்பிட்ட காலம் மாத்திரம், மைத்திரி–ரணில் அரசாங்கம், இந்த விமான நிலையத்தில் நெல்லை களஞ்சியப்படுத்தி வைத்திருந்தது.

அதற்கு பின்னர் விமான நிலையத்தை வெற்றிகரமாக இயக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் அனைத்தும் பயனற்றுப் போயின. அண்மையில் மத்திய கிழக்கு போர் வெடித்த போது, வளைகுடா நாடுகளை மையப்படுத்தி இருந்த விமான நிலையங்கள், ஈரானின் தாக்குதல்களினால் செயலிழந்தன.

குறிப்பாக, பயணிகள் விமானம் மாறிச் செல்லும், டுபாய், டோஹா, அபுதாபி விமான நிலையங்கள் செயற்பட முடியாமல் போனதால், கிழக்கு மற்றும் மேற்கு நாடுகளை இணைக்கும் விமானப் பயணங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. இது உலகளவில் தாக்கத்தை ஏற்படுத்தியது. ஒரு மாதத்திற்கு மேலாக இந்த நிலை நீடித்த போது இலங்கை அரசாங்கம் மாற்றுத் திட்டம் ஒன்றை முன்வைத்தது.

மத்தள விமான நிலையத்தை, மத்திய கிழக்கு நாடுகளின் விமான நிறுவனங்களுக்கான மாற்றுத் தரிப்பிடமாக பயன்படுத்துவதற்கு அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால், டுபாய், கட்டார், அபுதாபி போன்ற நாடுகளின் விமான நிறுவனங்கள் அதற்கு முன் வரவில்லை.

மத்தள விமான நிலையத்தை அவ்வாறு மாற்றியமைப்பது, எதிர்காலத்தில் தங்களின் விமான நிலையங்களின் பயன்பாட்டை குறைக்கும் ஆபத்து இருப்பது அதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். அது தவிர மத்தளவில் அவர்கள் தங்களின் வளங்களை கொண்டு வந்து புதிதாகக் கட்டி எழுப்ப வேண்டிய பிரச்சினையும் இருந்தது.

மத்திய கிழக்கு போரின் காரணமாக மத்தள விமான நிலையத்தை எழுச்சி பெற வைக்கின்ற முயற்சி சாத்தியமற்றுப் போன நிலையில் தான், இப்போது இலங்கை அரசாங்கம் 30 ஆண்டுகளுக்கு அதனைக் குத்தகைக்கு வழங்குவதற்கான முயற்சியில் இறங்கியிருக்கிறது.

விமான நிலையத்தை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கானவாய்ப்பு இல்லை என்பது, கிட்டத்தட்ட இரண்டு தசாப்தங்களில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் மூலம் உணரப்பட்டு விட்டது. ஆனாலும் 250 மில்லியன் டொலர் செலவில் கட்டப்பட்ட விமான நிலையத்தை, கைவிட முடியாத நிலை அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருக்கிறது.

அவ்வாறு கைவிடப்படுவதால் ஏற்படும் பொருளாதார இழப்பு ஒரு பக்கம் இருக்க, அரசியல் ரீதியான விமர்சனங்களை எதிர் கொள்ள வேண்டிய நிலையும் உருவாகும். எனவே, அரசாங்கத்திற்கு இருக்கின்ற ஒரே வழி, அதனை வெளித் தரப்பினருக்கு வழங்குவதாகும்

'வெள்ளை யானைத் திட்டம்', 'பயணிகள் யாரும் வராத விமான நிலையம்' என பரவலாக அறியப்பட்ட மத்தள விமான நிலையத்தை வெளிநாடுகள் அல்லது வெளிநாட்டு நிறுவனங்கள் பொறுப்பேற்கும் என நம்புவது கடினமானது. ஏனென்றால் இலாபம் சாத்தியமற்ற ஒரு விமான நிலையத்தை பொறுப்பேற்பதற்கு எந்த ஒரு நிறுவனமும் முன் வராது.

ஆனால், மூலோபாய நலன்களை அடையும் நோக்கில் உள்ள நிறுவனங்கள் நாடுகள் அல்லது தரப்புகள் இதனை இலக்கு வைக்கலாம். அப்படித்தான் முன்னர் ரஷ்ய–இந்திய கூட்டு முயற்சியாக இந்த விமான நிலையத்தை இயக்குவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

அப்போது கூட இந்த விமான நிலையத்தை, விமான சேவைகளை நடத்துவதற்காக பயன்படுத்துவதற்கு திட்டமிடப்படவில்லை. மாறாக, விமானிகளுக்கான பயிற்சிகளை வழங்குவதற்கும் பழுது பார்ப்புக்குமான ஒரு கேந்திரமாக, இதனை பயன்படுத்துவதே ரஷ்ய–இந்திய கூட்டு முயற்சியின் நோக்கமாக இருந்தது.

இவ்வாறான ஒரு மையம் மத்தள விமான நிலையத்தில் உருவாவதை அமெரிக்கா விரும்பாமல் போனது ஆச்சரியம் இல்லை. இதேபோன்று தான், முன்னர் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் திருகோணமலையில் ஒரு விமானங்களைப் பழுதுபார்க்கும் நிலையத்தை உருவாக்கும் முயற்சியில் சீனா இறங்கியது.

இலங்கை விமானப்படையில் உள்ள சீனத் தயாரிப்பு விமானங்களை பழுது பார்ப்பதற்கான நிலையத்தை, சீனக்குடாவில் அமைக்கத் திட்டமிடப்பட்டது. ஆனால், இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளின் எதிர்ப்பை அடுத்து, அந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

இதேபோன்று தான், மத்தள விமான நிலையத்தை இந்திய- ரஷ்ய கூட்டு நிறுவனத்திடம் வழங்கும் முடிவும் கூட கைவிடப்பட்டது. இப்போது மீண்டும் அந்த விமான நிலையத்தை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்குகின்ற முயற்சியில் அரசாங்கம் இறங்கியுள்ளது. இதனைப் பெறுவதற்கு உலகளாவிய ரீதியாக யாரும் போட்டியிடலாம். இந்தியா, சீனா, ரஷ்யா, அமெரிக்கா என எந்த நாடும் அதற்கு முயற்சிக்கலாம். அப்படியானால் இந்த போட்டியில் யார் வெற்றி பெறுவார்கள்? என்ற கேள்வி இருக்கிறது.

இந்தியா இந்த விமான நிலையத்தை பெற்றுக்கொள்ள விரும்பினாலும், வர்த்தக நோக்கில் பயனற்ற இந்த விமான நிலையத்தை பொறுப்பேற்பதற்கு தயாராக இல்லை. வர்த்தக ரீதியாக இழப்புகளை ஏற்படுத்தும் ஒரு இடத்தை பெற்றுக் கொள்வதற்கு, இந்தியா விரும்பவில்லை. அதனால் தான் ரஷ்ய நிறுவனத்துடன் கூட்டாக இணைந்து செயற்பட முன்வந்திருந்தது.

இப்போது கூட இந்தியத் தரப்பு இதில் முதலீடு செய்வதற்கு ஆர்வம் காட்டுமா என தெரியவில்லை. ரஷ்யத் தரப்பு மீண்டும் வந்து முட்டிக் கொள்வதற்கு முற்படுமா என்ற கேள்வியும் உள்ளது.

இந்தக் கூட்டு முயற்சித் திட்டம் நிறுத்தப்பட்ட பின்னர், இலங்கையில் முதலீட்டுக்கான சூழல் இல்லை என ரஷ்யத் தூதுவர் விசனத்துடன் கூறியிருந்தார் என்பது நினைவிருக்கலாம்.

மீண்டும் இலங்கையில் முதலீடு செய்வதற்கு ரஷ்யா முன் வந்தாலும் கூட, அதையும் தட்டிக் கழிப்பதற்கு,- வெட்டி விடுவதற்கு அமெரிக்கா முற்படக் கூடும். இது ஒரு புறம் இருக்க.

இப்போது அவசர அவசரமாக மத்தள விமான நிலையத்தை சர்வதேச முதலீட்டாளர்களுக்காக திறந்து விட அரசாங்கம் எடுத்த முடிவுக்கு பின்னால், இன்னொரு மூலோபாய நலன் காரணமாக இருக்கலாம்.

ஈரானிய போர்க்கப்பல் ஒன்று இலங்கைக்கு தெற்காக மூழ்கடிக்கப்படுவதற்கு, சில நாட்களுக்கு முன்னதாக தமது இரண்டு போர் விமானங்களை மத்தள விமான நிலையத்தில் தரையிறக்குவதற்கு அமெரிக்காவினால் அனுமதி கோரப்பட்டதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பாராளுமன்றத்தில் கூறியிருந்தார்.

அதற்கு தமது அரசாங்கம் அனுமதி அளிக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். இது அமெரிக்காவுக்கு ஏமாற்றத்தை கொடுத்திருக்காது என கருதினால் அது முட்டாள்தனம்.

இவ்வாறான நிலையில், மத்தள விமான நிலையத்தை சீனா அல்லது ரஷ்யா பயன்படுத்துவதை தடுக்க வேண்டுமானால், அமெரிக்கா அதனை பொறுப்பேற்க வேண்டும். அதில் முதலீடு செய்ய வேண்டும்.


மத்தளவில் தனது விமானங்கள் தரையிறக்கப்படுவதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதி மறுத்த சூழலில், அந்த விமான நிலையத்தைத் தன் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கு அமெரிக்கா எண்ணியிருக்கலாம். அதனை அடிப்படையாகக் கொண்டு கூட, இலங்கை அரசாங்கம் இந்த கேள்விப் பத்திரங்களை கோரியிருக்க வாய்ப்புகள் உள்ளன.

தற்போதைய அரசாங்கம் அமெரிக்காவுடன் நெருங்கி செயற்படுகிறது. அமெரிக்காவை பகைத்துக் கொள்ளத் தயாராக இல்லை. எனவே மத்தள விமான நிலையம் அமெரிக்காவுக்கு 30 ஆண்டு குத்தகைக்கு வழங்கப்பட்டாலும் ஆச்சரியம் இல்லை. இது நடக்குமா, இல்லையா என்று உறுதியாகக் கூற முடியாது.

ஆனால், இவ்வாறான நிகழ்வு ஒன்றுக்கான சாத்தியங்கள் உள்ளதா என்பது இன்னும் சில மாதங்களில் தெரியவரும்.

# 15 அடி நீளமான முதலை வயிற்றில் 6 சோடி செருப்பு 2 துண்டிக்கப்பட்ட கைகள், மனித உடற்பாகங்கள்





தென்னாப்பிரிக்காவின் எம்புமலங்கா (Mpumalanga) மாகாணத்தில் உள்ள கோமாட்டி ஆற்றில் ஏற்பட்ட வெள்ளத்தில், 59 வயதான ஓட்டல் அதிபர் கேப்ரியல் பாடிஸ்டா தனது காரோடு அடித்துச் செல்லப்பட்டார். அவரைத் தேடும் பணியில் ஈடுபட்ட மீட்புக் குழுவினர், ஆற்றுப் பகுதியில் அசையாமல் படுத்துக் கிடந்த 15 அடி நீளமும் 500 கிலோ எடையும் கொண்ட ஒரு ராட்சத முதலையைக் கவனித்தனர்.

அந்த முதலையின் வயிறு வழக்கத்திற்கு மாறாக வீங்கியிருந்ததைக் கண்ட அதிகாரிகள், ட்ரோன்கள் மூலம் ஆய்வு செய்த பிறகு அது பாடிஸ்டாவை விழுங்கியிருக்கலாம் எனச் சந்தேகித்தனர்.

இதையடுத்து அந்த முதலையைக் கொன்று அதன் உடலை மீட்பதற்காக கேப்டன் ஜோஹன் பொட்ஜிட்டர் என்ற துணிச்சலான போலீஸ் அதிகாரி களமிறங்கினார். ஹெலிகாப்டரில் இருந்து ஒரு கயிறு மூலம் கட்டப்பட்டு, முதலைகள் நிறைந்த ஆற்றுக்குள் இறக்கப்பட்ட அவர், கொல்லப்பட்ட முதலையின் உடலை லாவகமாகப் பிணைத்து மேலே தூக்கினார்.

உயிருள்ள மற்ற முதலைகள் அருகில் சுற்றிக் கொண்டிருந்த போதிலும், தனது உயிரைப் பொருட்படுத்தாமல் அவர் செய்த இந்த வீரச் செயல் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

கண்டெடுக்கப்பட்ட முதலையின் உடலை உடற்கூறு ஆய்வு செய்த போது உள்ளே மனித உடல் பாகங்கள் இரண்டு துண்டிக்கப்பட்ட கைகள், விலா எலும்புகள் மற்றும் ஒரு மோதிரம் ஆகியவை கண்டறியப்பட்டன. அந்த மோதிரத்தை வைத்து அது பாடிஸ்டா தான் என முதற் கட்டமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. ஆனால், அதிகாரிகளுக்குப் பெரும் அதிர்ச்சியாக முதலையின் வயிற்றுக்குள் பல்வேறு அளவுகளில் மற்றும் மாடல்களில் 6 ஜோடி காலணிகள் இருந்தன. இவை பாடிஸ்டாவுடையவை அல்ல என்பதால், அந்த முதலை இதற்கு முன்பு பலரைத் தாக்கி விழுங்கியிருக்கலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது.

முதலையின் வயிற்றில் கண்டெடுக்கப்பட்ட காலணிகளின் உரிமையாளர்கள் யார் என்பதைக் கண்டறியும் பணியில் தற்போது தென்னாப்பிரிக்கப் போலீசார் ஈடுபட்டுள்ளனர்.

அந்தப் பகுதியில் காணாமல் போனவர்களின் பட்டியலைச் சரிபார்த்து, முதலையின் இரையான மற்றவர்கள் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. உயிரிழந்த ஓட்டல் அதிபரின் உடல் பாகங்கள் டி.என்.ஏ சோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இயற்கைச் சீற்றங்களின் போது ஆறுகளில் முதலைகளின் நடமாட்டம் அதிகரிப்பதால் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

# என்னை ஏன் ஏமாத்தணும்? -ஸ்டாலின்

திமுக மீண்டும் ஆட்சிக்கு வராததை விட ஸ்டாலின் தோல்வி அடைந்தது தான் திமுக உடன் பிறப்புகளை ஏகத்துக்கும் கவலையடைய வைத்துள்ளது. அவரைப் போலவே தோல்வியடைந்த துரை முருகன், ஸ்டாலினிடம் வருத்தப்பட்டுப் பேசியிருக்கிறார். கட்சியின் மூத்த தலைவர்கள் பலரும் இந்த வருத்தத்தையும் கவலையையும் ஸ்டாலினிடம் சொன்ன போது, நான் தோற்றதற்காக எனக்கு கொஞ்சமும் வருத்தமில்லை. பல வெற்றி தோல்விகளைப் பார்த்திருக்கிறேன். தோல்வி என்னை பெரிதும் பாதிக்காது. ஆனால் எனக்கு கவலை என்பது, கட்சி தோற்றுப் போனது தான். நிறைய நல்லது செய்திருக்கிறோம். அப்படியிருந்தும் ஏன் கட்சி தோற்றுப் போனது ? எதற்காக இந்த தண்டனையை மக்கள் அளித்தார்கள்? என்பது தான் எனக்குப் புரியவில்லை. இருந்தாலும் இன்னும் உழைக்க வேண்டும் என்கிற மனநிலையை எனக்கு மக்கள் தந்திருக்கிறார்கள் என்பதாகவே எடுத்துக் கொள்கிறேன். நீங்கள் வருத்தப்படாதீர்கள் என்று தம்மிடம் பேசும் அனைவரிடமும் சொல்லியிருக்கிறார் ஸ்டாலின். இரவு நீண்ட நேரம் குடும்பத்தினரிடமும் மனம் விட்டு இதே ரீதியில் பேசிய அவர், தவறு எங்கே நடந்தது என தீவிரமாக அலச வேண்டியதிருக்கிறது. நான் நம்பியவர்களே எனக்கு பொய்யான தகவல்களை தந்துள்ளார்களா? எதற்காக என்னை ஏமாற்ற வேண்டும்? என்றெல்லாம் ஆதங்கப்பட்டுள்ளார் ஸ்டாலின் கிடைத்துள்ள புள்ளி விபரங்களின்படி தி.மு.க. கூட்டணிக்கு 1 கோடியே 54 லட்சத்து 82 ஆயிரத்து 782 வாக்குகள் கிடைத்துள்ளன. இம்மக்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். கூடுதல் தொகுதிகளில் வெற்றி பெற்ற கட்சியானது, நம்மை (18ம் பக்கம் பார்க்க)



# அழகான அந்தப் பனைமரம்

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



எனது நண்பர் ஒருவர் சொன்னார். தேனிசை செல்லப்பாவை ஓர் ஈழத் தமிழர் என்று தான் தன்னுடைய தகப்பனார் நம்பினார் என்று. அந்தளவுக்கு செல்லப்பாவின் குரல் ஈழத் தமிழர்களுக்கு நெருக்கமானது.

பாக்கு நீரிணையால் பிரிக்கப்படும் இரண்டு தமிழ்ச் சமூகங்களுக்கும் இடையே கலைத்துறைப் பிணைப்பு என்று பார்த்தால் சாஸ்த்திரிய சங்கீதமும் பெருமளவுக்குப் பொதுவானது. ஜனரஞ்சக இசையும் பெருமளவுக்குப் பொதுவானது. இதில் ஈழத் தமிழர்களின் ஜனரஞ்சக இசை தனக்கென்று ஒரு தனித்துவமான தடத்தை துலக்கமாக உருவாக்கத் தொடங்கியது.

ஈழத்து மெல்லிசைப் பாடல்களில் தான் என்று மெல்லிசைப் பாடகரும் முன்னாள் துணைவேந்தருமான பேராசிரியர் சண்முகலிங்கனும், சேர்.பொன். இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீடத்தின் பீடாதிபதியான கலாநிதி ரொபேர்ட்டும் கூறுகிறார்கள்.''ஈழத்து மெல்லிசைப் பாரம்பரியம் ஓர் இயக்கமாக வளர வேண்டும் என்று நான் கனவு கண்டேன். ஆனால் பின்னாளில் இயக்க மெல்லிசைப் பாடல்களே கிடைத்தன. என்று பேராசிரியர் சண்முகலிங்கன் கூறுகிறார்.

இலங்கைக்கான இசை மரபினை உருவாக்க வேண்டும் என்ற கருத்தை பாடகரும் மருத்துவப் பேராசிரியருமான பரமேஸ்வரன் 1974இல் யாழ்ப்பாணத்தில் நடந்த உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் முன் வைத்ததாக சண்முகலிங்கன் கூறுகிறார். 1970களில் ஈழத்துக்கான தனித்துவ ஆக்க இசையாக மெல்லிசையை உருவாக்கும் முயற்சியானது. ஆக்க இசைக் கலைஞரான எஸ்.கே.பரராஜ



சிங்கம் அவர்களின் நாட்டார் பாடல் நவீனப்படுத்துதலுடனேயே தொடங்குவது இங்கு கவனத்திற்குரியது. இந்த தேடலில் காவலூர் ராஜதுரை, எம்.கே. ரொக்சாமி போன்றோர் பராவுடன் இணைந்திருந்தனர் என்று சண்முகலிங்கன் கூறுகிறார்.

மெல்லிசைப் பரப்பில் ஈழத் தமிழர்களுக்கு என்று தனித்துவமான ஒரு தடத்தைக் கட்டியெழுப்ப முற்பட்டவர்களில் கண்ணன் மாஸ்டர் முக்கியமானவர். அதே கண்ணன் மாஸ்டர் தான் பின்னர் போர்க்காலப் பாடல்களில் ஈழத் தமிழர்களுக்கேயான ஒரு தனித்துவமான தடத்தைச் சிருஷ்டித்தவர்களில் முதன்மையானவர் என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

ஆயுதப் போராட்டதுக்கு முந்திய மிதவாத அரசியலில் இந்திய சினிமாப் பாடல்களே தேர்தல் மேடைகளில் அதிகம் ஒலித்தன. ஆனால் ஆயுதப் போராட்டம் தனக்கென்று ஒரு தனித்துவம்மிக்க இசைத் தடத்தை உருவாக்க விளைந்தது. அது தேச நிர்மாணத்தின் ஒரு பகுதியாகவும் இருந்தது. ஈழத் தமிழர்களின் ஆயுதப் போராட்டம் தமிழுக்கு புதிய போர்க் களச் சொற்களை- போர்த் தமிழை- அறிமுகப்படுத்தியது. நவீன தமிழில் கிடைத்த புதிய போர் அனுபவங்கள் இலக்கியமாகின. நாடகமாயின. ஓவியமாகின. இசைப் பாடல்களாயின. அவை மண் மணத்தோடு தனித்துவமான ஒரு புதிய கலை இலக்கியத் தடத்தை உருவாக்கின.

ஈழப் போரோடு எழுச்சி பெற்ற இசைப் பாரம்பரியத்தில் முதலில் கேட்ட குரல்களில் ஒன்று தேனிசை செல்லப்பாவுடையது. செல்லப்பாவின் பாடல்கள் ஒருபுறம் ஈழத் தமிழர்களுக்கேயான தனித்துவமான போரப் பாடல் என்ற வகைக்குள் அடங்கும்.

அதேசமயம் அதுவும் ஈழ-தமிழக இசைப் பிணைப்பின் ஒரு பகுதி தான். இது செல்லப்பாவில் தொடங்கி தமிழகத்தின் வேறு சில பிரபலமான



பாடகர்கள் இசைக் கலைஞர்கள், இசைத் தொழில் நுட்பவியலாளர்கள் போன்றோரின் பங்களிப்புவரை வருகிறது.

ஈழத் தமிழர்களின் போர்க் காலப் பாடல்கள் தமிழகத்தை எந்த அளவுக்கு சென்றடைந்தன? பரவலாகின? இந்தக் கேள்வி உண்டு. இப்பொழுது ஈழத் தமிழ் வீடுகளில் அதிகமாகப் பார்க்கப்படும் தொலைக்காட்சி தொடர் நிகழ்ச்சிகளில் ஒன்று சரிகமப அது தமிழக சினிமாத் தொழில்துறையின் நீட்சி. அங்கே ஈழத் தமிழர்களின் கண்ணீரும் காயங்களும் சந்தைப்படுத்தப் படுகின்றன என்ற விமர்சனங்கள் உண்டு. ஆனாலும் அது ஈழத்தமிழ் இசை ஆளுமைகளை பெருந் தமிழ்ப் பரப்பை நோக்கி விரிக்கின்றது. அது மிகஅவசியம். பெருந்தமிழ்ப் பரப்பை நோக்கி ஈழத்தமிழ் கதைகளைக் கொண்டு போக வேண்டும் டூரிஸ்ட் ஃபேமிலி'', நீளிரா ''ஆகிய படங்களைப் போல.

இவ்வாறு சரிகமப மேடையில் சில ஆண்டுகளுக்கு முன் ஈழத்து இசையமைப்பாளர் கண்ணனின் பேத்தி பாடினார். அவர் மேலெழுந்த காலகட்டத்தில் ஒரு நிகழ்ச்சியில் அவருடைய பெற்றோரை மேடைக்கு அழைத்தார்கள். அங்கே கண்ணனின் மகள் சொன்னார், என்னுடைய அப்பா ஈழத்தில் ஒரு லெஜண்ட் என்று. உண்மை. ஈழப் போர்க் காலப் பாடல்களைப் பொறுத்தவரை கண்ணன் மாஸ்டர் ஒரு லெஜன்ட்தான். ஆனாலும் சரிகமப மேடையில் இருந்த நடுவர்களில் எத்தனை பேருக்கு அவரைத் தெரிந்திருந்தது?

ஈழத் தமிழர்களின் போர்ப் பாடல்கள் எந்தளவுக்கு தமிழகத்தின் வெகு சனப் பரப்பைச் சென்றடைந்திருந்தன? தமிழகத்தின் சினிமா இசைப் பிரம்மாண்டத்தின் முன் ஈழத் தமிழர்களின் போர்ப் பாடல்கள் ஜனவசியம் குறைந்தவையா?

ஆனால் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் அவை பரவலாகக் கொண்டாடப்பட்டன. தாயகத்தை விட்டுப் பிரிந்த ஏக்கத்தோடு தவித்த முதலாம் தலைமுறைப் புலம் பெயரிகளின் திரும்பக் கிடைக்காத இறந்த காலம் ஒன்றின் மங்காத நினைவுகளை போர்ப் பாடல்கள் இரை மீட்டன. இதனால் புலம்பெயர்ந்த தமிழர்கள் செல்லப்பாவைக் கொண்டாடினார்கள் போஷித்தார்கள் .

தமிழ்நாட்டின் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவராகிய சுந்தரராமசாமி புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் தான் ஈழத்துப் போர்க் காலப் பாடல்களைக் கேட்டிருக்கிறார். அந்தப் பாடல்களை அவர் பாராட்டி எழுதியிருக்கிறார். காற்றில் கலந்த பேரோசை என்ற அவருடைய கட்டுரைகளின் தொகுப்பில் இந்த விடயம் உண்டு.

இலங்கையில் ஈழத்துப் போர்க் காலப் பாடல்களில் பலவற்றுக்குச் சட்டரீதியான தடை உண்டு. ஆனால் புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் அந்தப் பாடல்கள் பரவலாகக் கேட்கப்படுகின்றன் இசைக்கப்படுகின்றன. தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளின் நீண்ட பெருஞ் சாலைகளில், நீண்ட தூரப் பயணங்களில் அந்தப் பாடல்கள் ஒலிப்பதுண்டு. 2009க்குப்பின் சீமானின் நாம் தமிழர் கட்சியும் தமிழகத்தில் அந்தப் பாடல்களைக் கொண்டு செல்கிறது. அண்மை ஆண்டுகளில் தாயகத்திலும் இசை மேடைகளில் சில பாடல்களைக் கேட்க முடிகிறது.

ஈழத்துப் போர்க் காலப் பாடல்களின் முன்னோடிகளில் ஒருவராக செல்லப்பா காணப்படுகிறார்.அவர் பெருமளவுக்கு மாற்று நீரோட்ட இசைப் பாரம்பரியத்துக்கு ஊடாக வந்தவர். சி.பா. ஆதித்தனாருடன் இணைத்து தமிழின உரிமைப் பாடல்களைப் பாடியவர். லாப நோக்கமுடைய வெகு சன சினிமா இசைப் பாரம்பரியத்திலிருந்து வந்தவரல்ல. அதனால் தான் அவர் ஈழப் போருக்கு நெருக்கமாக வந்தார். ஈழப் போராட்டம் பாடல்களைத் தயாரிக்கத் தொடங்கிய போது அதன் முதற் குரல்களில் ஒருவராக செல்லப்பாவும் இணைந்தார்.

ஈழத்துப் போர்க்கால பாடல்களில் காசி-செல்லப்பா இசைச் சோடி தனித்துவமானது. முக்கியமானது. காசியானந்தனின் பாடல் வரிகளை செல்லப்பாவின் இசையும் குரலும் சேர்ந்து தூக்கின.

பின்னர் புதுவை-கண்ணன் என்று மற்றொரு இசைச் சோடி தோன்றியது. ஈழத்துப் போர்க் காலப் பாடல்கள் ஒரு கட்டத்தில் செல்லப்பாவைக் கடந்து புதிய இசையமைப்பாளர்களையும் புதிய பாடகர்களையும் உற்பத்தி செய்தன.ஆனால் நெருக்கடியான ஒரு தொடக்க காலகட்டத்தில் கேட்ட குரல் என்ற காரணத்தால் செல்லப்பாவின் குரல் ஈழத்தமிழர்களின் நினைவுகளுக்கு அன்னியோன்யமாகி விட்டது.

வணிக நோக்கிலான சோடினைகள் இல்லாத.கிராமத்து எளிமையும் அப்பாவித்தனமும் தொன்மையும் கலந்த அடர்த்தியான குரல்.சிக்கலான இசைக் கருவிகளை பயன்படுத்தாமல் மிகக் குறைந்த இசைக்கருவிகளோடு உருவாக்கப்பட்ட எளிமையான பாடல்கள் .இவைதான் செல்லப்பா.

செல்லப்பா நவீன காலத்தில் ஈழ-தமிழக பிணைப்பில் ஒரு தனி அத்தியாயம். போர்க்காலத்தின் நினைவுகளோடு பிரிக்கப்பட வியலாதபடி பிணைக்கப்பட்டிருக்கும் ஒரு தமிழகக் குரல் அது.



# இலங்கைக்கான உள்ளக சுயநிர்ணயம்:- பேச்சுக்களைத் தாண்டிய நடைமுறை வழி!


**கட்டுரையாளர்:**

அவுஸ்திரேலியாவில் இருந்து

– ராஜ்.சிவநாதன் –


### போருக்குப் பிந்தைய நிலையில் இன்னும் தீராத கேள்வி

இலங்கை உள்நாட்டுப் போர் 1983 முதல் 2009 வரை நீடித்து முடிவடைந்து பதினேழு ஆண்டுகள் கடந்தும், இலங்கை இன்னும் ஒரு அடிப்படை அரசியல் சவாலுடன் போராடிக் கொண்டிருக்கிறது. அந்த சவால் என்னவென்றால் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் வரலாற்று ரீதியாக வாழ்ந்து வரும் தமிழர் மற்றும் தமிழ் பேசும் மக்களின் அரசியல் விருப்பங்கள், அடையாளம், மரியாதை, பாதுகாப்பு மற்றும் தன்னாட்சிக் கோரிக்கைகள் ஒன்றிய இலங்கைக்குள் எவ்வாறு பொருத்தமாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பது.

போர் முடிந்த பின் பல அரசியல் வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. அரசியலமைப்பு மாற்றம் குறித்து பலமுறை பேசப்பட்டது. நல்லிணக்கம், சமாதானம், அபிவிருத்தி, தேசிய ஒற்றுமை போன்ற சொற்கள் அரசியல் மேடைகளில் மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்பட்டன. ஆனால் இந்த சொற்கள் பெரும்பாலும் உண்மையான அமைப்புசார் மாற்றங்களை மாற்றி நிற்கும் பேச்சுகளாகவே இருந்து வருகின்றன.

இதன் விளைவாக தமிழர் அரசியல் கேள்வி மறைந்து போகவில்லை. அது தற்காலிகமாக ஒடுக்கப்பட்டிருக்கலாம். ஆனால் அதன் அடிப்படை நியாயம் இன்னும் உயிருடன் உள்ளது.

இன்று உள்ளக சுயநிர்ணய உரிமை மீண்டும் முன்வைக்கப்படுவது ஒரு தீவிரவாதக் கோரிக்கையாக அல்ல் மாறாக சர்வதேச சட்டத்தாலும் அரசியல் நடைமுறைகளாலும் அங்கீகரிக்கப்பட்ட நியாயமான கோட்பாட்டின் அடிப்படையிலேயே ஆகும்.

இன்றைய சவால் வெறும் கோட்பாட்டு விவாதமல்ல. அது நடைமுறை சார்ந்தது. இலங்கையின் அரசியல், சட்ட, சமூக சூழலில் தமிழ் மக்களின் உள்ளக சுயநிர்ணய உரிமை எந்த வடிவில் நடைமுறைப்படுத்தப்பட முடியும் என்பதே இன்று கேட்க வேண்டிய உண்மையான கேள்வி.

### ஒஸ்லோ:- தவற விடப்பட்ட வரலாற்று வாய்ப்பு

உள்ளக சுயநிர்ணயம் என்ற கருத்து சமீபத்திய கண்டு பிடிப்பு அல்ல. 2002 டிசம்பரில் நடைபெற்ற ஒஸ்லோ பேச்சு வார்த்தைகளில் இது மிகத் தெளிவாக முன் வைக்கப்பட்டது. அப்பொழுது இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் ஒன்றிய இலங்கைக்குள் உள்ளக சுயநிர்ணயத்தின் அடிப்படையில் சமஸ்டி அரசியல் தீர்வை ஆராய ஒப்புக் கொண்டன.

இந்த ஒப்புதல் வரலாற்று முக்கியத்துவம் கொண்டது. ஏனெனில், தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு பிரிவினை அல்லாத ஆனால் உண்மையான அதிகாரப் பகிர்வு கொண்ட அமைப்பு தேவை என்பதை இரு தரப்பும் அப்போது ஏற்றுக் கொண்டன. அது நாட்டை உடைப்பதற்கான ஒப்புதல் அல்ல. மாறாக நாட்டின் ஒற்றுமையை அதிகாரப் பகிர்வின் மூலம் காக்கும் அரசியல் புரிதல் ஆகும். ஆனால், அந்த வரலாற்று வாய்ப்பு முழுமையாக பயன்படுத்தப்படவில்லை. அரசியல் நம்பிக்கையின்மை தெற்கிலுள்ள தேசியவாத அழுத்தங்கள், பேச்சுவார்த்தை தரப்புகளின் பல்வேறு உள்நிலை சிக்கல்கள், மற்றும் அதிகார அரசியலின் மாற்றங்கள் அந்த பாதையை முடக்கின. இன்று அதன் விளைவுகளை இலங்கை இன்னும் அனுபவித்து வருகிறது.




### உள்ளக சுயநிர்ணயம் என்றால் என்ன?

உள்ளக சுயநிர்ணயம் என்பது ஒரு மக்களுக்கோ அல்லது ஒரு தேசிய இனத்துக்கோ, ஒரு நாட்டின் எல்லைக்குள் இருந்தபடியே, தமது அரசியல் பொருளாதார, சமூக, பண்பாட்டு மற்றும் நிர்வாக விவகாரங்களில் அர்த்தமுள்ள கட்டுப்பாட்டை செலுத்தும் உரிமையாகும்.

இது பிரிவினையைக் குறிக்கவில்லை. இது ஒரு நாட்டின் இறையாண்மையை மறுப்பதில்லை. மாறாக, பல்வகை இன, மொழி, மத மற்றும் பண்பாட்டு சமூகங்கள் ஒரே நாட்டுக்குள் மரியாதையுடனும் உரிமையுடனும் வாழ்வதற்கான அரசியல் அமைப்பை உருவாக்கும் கருவியாகும்.

உள்ளக சுயநிர்ணயம் வழங்கப்படும் போது, ஒரு மக்கள் தமது நிலம், கல்வி, பண்பாடு, பொருளாதாரத் திட்டமிடல், உள்ளூர் பாதுகாப்பு, வள மேலாண்மை, மொழி உரிமைகள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி போன்ற துறைகளில் நடைமுறை அதிகாரம் பெற முடியும். இதுவே உண்மையான தன்னாட்சியின் உள்ளடக்கம்.

### பேராசிரியர் பீரிஸின் விளக்கக் குறைபாடு

கொழும்பு பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும், பேராசிரியரும், முன்னாள் அமைச்சரும், சமாதான பேச்சுவார்த்தை காலத்தில் அரசாங்கக் குழுவின் தலைவராக செயல்பட்டவருமான பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் அவர்கள், சமீபத்தில் தந்தை செல்வா நினைவு பேருரையில் உள்ளக சுயநிர்ணயம் குறித்து கருத்து தெரிவித்திருந்தார். அவரது கருத்தின் சாரம், விடுதலைப் புலிகள் உள்ளக சுயநிர்ணயத்தை ஏற்றுக் கொண்டதாக தோன்றினாலும், அதன் பின்னணியில் வெளியக சுயநிர்ணயத்தின் மறைமுக அச்சுறுத்தல் இருந்தது என்பதாகும். இவ்வாறான விளக்கம் அரசியல் ரீதியாக வசதியானதாக இருக்கலாம். ஆனால் அது சட்ட ரீதியாகவும், வரலாற்றரீதியாகவும், சர்வதேச அரசியல் நடைமுறையாலும் பலவீனமான விளக்கம்.

விடுதலைப் புலிகளின் பேச்சுவார்த்தை நிலைப்பாடு தெளிவாக இருந்தது. உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், தமிழர் தாயகத்தில் கணிசமான பிராந்திய சுயாட்சி மற்றும் சுயநிர்வாகத்தை வழங்கும் அரசியல் கட்டமைப்பை சாதகமாக பரிசீலிக்க தயாராக உள்ளோம் என்பதே அவர்கள் கூறிய சாரம். ஆனால்,இத்தகைய உள்ளக உரிமைகள் நிராகரிக்கப்பட்டால், வெளியக சுயநிர்ணயம் குறித்து சிந்திக்க வேண்டிய சூழல் உருவாகும் என்பதும் அதே அரசியல் தர்க்கத்தின் ஒரு பகுதியாக இருந்தது.

இதனை அச்சுறுத்தல் என்று சித்தரிப்பது தவறு. ஒரு மக்களின் உள்ளக சுயநிர்ணய உரிமை தொடர்ந்து மறுக்கப்பட்டால் அந்த மக்களிடம் வெளியக சுயநிர்ணய கேள்வி எழுவது சர்வதேச அரசியலில் புதுமையல்ல. இது அச்சுறுத்தல் அல்ல மறுப்பு உருவாக்கும் அரசியல் விளைவு

### சமஷ்டி பிரிவினை அல்ல

இலங்கை அரசியல் உரையாடலில் நீண்டகாலமாக நிலவி வரும் மிகப் பெரிய தவறான புரிதல், சமஸ்டி என்றால் பிரிவினை என்று கருதப்படுவது தான். இது சட்ட ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் தவறான நிலைப்பாடு.

ஒரு நாட்டுக்குள் அதிகாரப் பகிர்வு ஏற்பாடு செய்வது, அந்த நாட்டை உடைப்பதாகாது. மாறாக, ஒற்றுமையை வலுப்படுத்தும் வழியாக அமையலாம். கனடா, சுவிட்சர்லாந்து, இந்தியா, பெல்ஜியம் மற்றும் ஸ்பெயின் போன்ற நாடுகள் பல்வேறு வடிவங்களில் சமஸ்டி, இணைப்பாட்சி, அசமச்சீர் சுயாட்சி அல்லது பிராந்திய சுயாட்சியை பயன்படுத்தி பல்வகை மக்களை ஒரே நாட்டுக்குள் வைத்திருக்கின்றன.

இந்த நாடுகள் அனைத்தும் சிக்கல்களற்றவை அல்ல. ஆனால் அவை காட்டும் அடிப்படை உண்மை முக்கியமானது அடையாளங்களை மறுப்பதால் ஒற்றுமை வலுப்படாது அவற்றை அரசியல் அமைப்பின் மூலம் அங்கீகரிப்பதே நிலையான ஒற்றுமைக்கு வழிவகுக்கும்.

கனடாவில் கியூபெக் விவகாரம் மிகப் பொருத்தமான உதாரணம். கியூபெக் மக்களின் மொழி, பண்பாடு, அரசியல் தனித்துவம் ஆகியவை அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அதனால் கனடா சிதறவில்லை. மாறாக, ஜனநாயக அரசியலமைப்பு, சிறுபான்மை உரிமைகள், கூட்டாட்சி மற்றும் உரையாடல் ஆகியவற்றின் மூலம் அந்த நாடு தனது ஒற்றுமையை பராமரிக்க முயல்கிறது.

### இலங்கையின் தற்போதைய அமைப்பு:- அதிகாரமற்ற அதிகாரப் பகிர்வு

இலங்கையில் 1987 ஆம் ஆண்டு இந்தியா–இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் 13வது திருத்தம் மூலம் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. கோட்பாட்டில் இது அதிகாரப் பகிர்விற்கான ஒரு கட்டமைப்பாக இருந்தது. ஆனால் நடைமுறையில் இது உண்மையான தன்னாட்சியாக மாறவில்லை.

நில அதிகாரம், காவல் அதிகாரம், பொருளாதார திட்டமிடல், நிர்வாக சுயாதீனம் ஆகிய முக்கிய துறைகள் மத்திய அரசின் கட்டுப்பாட்டிலேயே பெரும்பாலும் இருந்து வருகின்றன. ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஆளுநர்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண பிரதிநிதிகளை மீறிச் செயல்படும் அதிகாரத்தைப் பெற்றுள்ளனர். நிதி சுயாதீனம் இல்லாததால் மாகாணங்களின் செயல்திறனும் கட்டுப்படுத்தப்படுகிறது.

இதனால் உருவானது உண்மையான உள்ளக சுயநிர்ணயம் அல்ல. அது நிர்வாகப் பகிர்வு போலத் தோன்றும் மத்திய கட்டுப்பாட்டின் நீட்டிப்பாகவே இருந்து வருகிறது. மக்கள் தேர்ந்தெடுத்த மாகாண சபைகள் இல்லாத நிலை தொடர்வது இந்த அமைப்பின் ஜனநாயக நம்பகத் தன்மையையே கேள்விக்குறியாக்குகிறது.

### உடைந்த நம்பிக்கைகள்

தமிழர் அரசியல் கோரிக்கைகள் வெறுமனே ஒரு கட்சியின் தேர்தல் வாசகமல்ல. அவை நீண்டகால வரலாற்று அனுபவங்களின் விளைவுகள். சுதந்திரத்துக்குப் பின்னர் மொழி உரிமை, கல்வி சமத்துவம், நில உரிமை, பாதுகாப்பு, அரசியல் பிரதிநிதித்துவம், பொருளாதார அபிவிருத்தி ஆகிய துறைகளில் தமிழர்கள் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டதாக உணர்ந்துள்ளனர்.

பண்டாரநாயக்க – செல்வநாயகம் ஒப்பந்தம் கைவிடப்பட்டது. டட்லி–செல்வநாயகம் ஒப்பந்தமும் நடைமுறைக்கு வரவில்லை. 13வது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப் படவில்லை. அரசியலமைப்பு மாற்றங்கள் குறித்து பலமுறை வாக்குறுதி அளிக்கப்பட்டும், நடைமுறை மாற்றம் மிகக் குறைவாகவே ஏற்பட்டது.

(தொடரும்)

# தி.மு.க - அ.தி.மு.கவை மீறி விஜய்க்கு முதல் தேர்தலிலேயே பெரு வெற்றி எப்படிக் கிடைத்தது?




தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக, அதிமுக இரு பிரதான திராவிட கட்சிகளையும் பின்னுக்குத் தள்ளி விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் 108 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் போட்டியிட்ட கொளத்தூர் தொகுதியில் தவெக வேட்பாளர் வி.எஸ்.பாபு வெற்றி பெற்றார். அவரது அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த பலரும் தத்தமது தொகுதிகளில் பின்தங்கியுள்ளனர். தற்போதைய நிலவரம் தமிழ்நாட்டில் மக்கள் மாற்றத்தை விரும்பினார்கள் என்பதையே காட்டுவதாக அரசியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

தமிழ்நாட்டில், 76 ஆண்டுகள் வரலாறு கொண்ட திமுகவையும் 54 ஆண்டுகள் பழமையான அதிமுகவையும் பின்னுக்குத் தள்ளி மூன்று ஆண்டுகளுக்கும் குறைவாகவே வயதான ஒரு கட்சி ஆட்சியைப் பிடிக்கக்கூடிய சூழல் ஏற்பட்டுள்ளது. இப்படிப்பட்ட முடிவுகளை இந்த தேர்தல் வழங்கும் அளவுக்கு தமிழக அரசியல் களத்தில் என்ன நடந்தது? விஜய் இதைச் சாத்தியமாக்கியது எப்படி?

## கணிப்புக்களை விஞ்சிய ஆச்சரியம்

சமீபத்திய நிலவரங்களைப் பார்க்கையில் தமிழக மக்கள் ஒரு மாற்றத்திற்காக வாக்களித்து உள்ளனர் என்பதைப் பார்க்க முடிவதாக, முழு வெற்றி நிலவரம் முழுமையாக வெளிவருவதற்கு முன்பு பேசிய அரசியல் விமர்சகர் பேராசிரியர் ராமு மணிவண்ணன்.

இந்தத் தேர்தலில் மக்கள் சித்தாந்த அடிப்படையிலோ பிரச்னைகளை மையமாகக் கொண்டோ வாக்களித்ததாகக் கூற முடியாது. திராவிட ஆதிக்கத்தில் இருந்த தமிழக அரசியலில் புதுமை தேவை என்பதை அடிப்படை நோக்கமாகக் கொண்டே வாக்களித்து இருப்பதாகத் தோன்றுகிறது.

குறிப்பாக வெளியில் பெரிதாகத் தென்படாத ஆட்சி எதிர்ப்பு மனநிலை இருந்திருப்பதை இந்த முடிவுகள் காட்டுகின்றன. இது வெறுமனே திராவிட அரசியலுக்கு எதிரான மனநிலை என்றும் கூறிவிட முடியாது. ஏனெனில் அதிமுக கணிசமான தொகுதிகளில் முன்னிலை வகித்தது. இதன் மூலம், திமுக மீது குறிப்பாக இருந்த எதிர்ப்புணர்வை மக்கள் இந்தத் தேர்தலில் வெளிப்படுத்தி இருப்பதாகத் தெரிகிறது,' என்று அவர் விளக்கினார்.

தமிழ்நாட்டின் சமீப கால சட்டப்பேரவைத் தேர்தல் வரலாற்றில் எதிர்பார்க்கப்படாத முடிவுகள் இந்தத் தேர்தலில் வெளிப்பட்டு வருவதாகவும் அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கின்றனர்.

விஜய் மற்றும் அவரது கட்சி இந்த முறை முடிவுகளைத் தீர்மானிப்பதில் முக்கியக் காரணியாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டு இருந்தாலும், இவ்வளவு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பது ஆச்சரியம் அளிப்பதாகக் கூறுகிறார் பேராசிரியர் ராமு மணிவண்ணன்.

இளைஞர்கள் மற்றும் பெண்களின் ஆதரவு தவெக-வுக்கு கணிசமாக இருப்பதும், திமுக, அதிமுகவின் வாக்குகளில் ஒரு பகுதி அவர் பக்கமாகத் திரும்பும் எனவும் அரசியல் நிபுணர்கள் பலரால் ஏற்கெனவே கணிக்கப்பட்டிருந்தது. ஆனால், இவ்வளவு பெரிய வெற்றியைத் தரும் அளவிலான ஆதரவு கிடைக்கும் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை என்கிறார் பத்திரிகையாளர் திவ்யா.

மேலும், 'திமுக, அதிமுக ஆகிய கட்சிகளுக்குக் கிடைக்கும் வாக்குகளைப் பார்த்தோமானால், ஸ்டாலின், எடப்பாடி பழனிசாமி ஆகியோரை ஆதரிக்கும் மக்கள், இரு திராவிட கட்சிகளையும் காலங்காலமாக ஆதரித்து வருவோரின் வாக்குகள், ஆட்சி நிர்வாகத்தில் ஒரு சீரான தொடர்ச்சி வேண்டுமெனக் கருதுவோரின் வாக்குகள் எனப் பல தரப்பில் இருந்து கிடைக்கும் வாக்குகளை அடிப்படையாகக் கொண்டது.

ஆனால் தமிழக வெற்றிக் கழகத்தைப் பொறுத்தவரை பெரும்பாலும் விஜயின் ஆளுமையை மட்டுமே வைத்து இவ்வளவு பெரிய ஆதரவைப் பெற்றுள்ளது. மக்களிடையே இருந்த திமுக எதிர்ப்பு மனநிலையின் விளைவுகளை விஜய் அறுவடை செய்திருக்கிறார் என்றாலும், அதைத் தாண்டி, எவ்வித அரசியல் பின்னணியும் இல்லாத, முற்றிலும் புதிய கட்சியைக் கொண்டு, தவெக பெற்றுள்ள இந்த வெற்றி முற்றிலும் ஒரு நட்சத்திர ஆளுமைக்குக் கிடைத்திருப்பதாகவே பார்க்க வேண்டியுள்ளது,' என்று கூறுகிறார் பத்திரிகையாளர் திவ்யா.

திமுக சுமார் 60 தொகுதிகளில் புது முகங்களை வேட்பாளர்களாக நிறுத்தியது மற்றும் செந்தில் பாலாஜி போல 24 இடங்களில் அரசியல் தலைவர்கள் தொகுதி மாறிப் போட்டியிட்டனர். இது, தனது ஆட்சிக்கு எதிரான மனநிலை மக்களிடையே நிலவுகிறது என்பதை திமுக முன்பே அறிந்திருந்தது என்பதைக் காட்டுவதாக அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

ஏற்கெனவே இருந்த சட்டமன்ற உறுப்பினர்களுடைய செயல்பாடுகள் மீது அதிருப்தி நிலவியதை அவர்கள் உணர்ந்து இருந்ததையும் அதன் காரணமாகவே இந்த நடவடிக்கையை மேற்கொண்டதையும் புரிந்துகொள்ள முடிகிறது,என்கிறார் மூத்த பத்திரிகையாளர் மாலன்.

விஜய் தனது கடைசி பரப்புரையில் பேசும்போது, 'உங்களிடம் கைகூப்பிக் கேட்டுக் கொள்கிறேன். வாக்குச்சாவடிக்குச் சென்று வாக்களித்து, ஸ்டாலினிடம் இருந்து தமிழகத்தையும் ஜனநாயகத்தையும் காப்பாற்றுங்கள்' என்று உணர்ச்சிமயமாகப் பேசியிருந்தார்.

அதன் தாக்கம் வாக்குப்பதிவில் எதிரொலித்து இருப்பதாகக் கூறும் மாலன் 1967, 1977, 1991 ஆகிய தேர்தல்களில் மக்கள் வாக்களித்ததைப் போலவே இந்த முறையும் புதிய தலைமையை எதிர்பார்த்து புத்துணர்ச்சியுடன் வாக்களித்து இருப்பதைக் காண முடிவதாகக் கூறுகிறார்.

## இளைஞர்கள் - பெண்களைக் கவர்ந்த விஜய்

தவெக-வை பொறுத்தவரை, விஜய் குறைந்த இடங்களில் மட்டுமே பிரசாரம் மேற் கொண்டார். அதிலும், காரைக்குடி போன்ற பகுதிகளில் சிறிது நேரம் மக்கள் முன்பு வந்துவிட்டு, எதுவும் பேசாமல் சென்றிருந்தார். அப்படியிருந்தும் கூட அவருக்கு இவ்வளவு பெரிய ஆதரவு கிடைத்திருக்கிறது என்பதைக் கவனிக்க வேண்டியுள்ளது. இது மக்கள் மாற்றத்தை விரும்பியிருக்கிறார்கள் என்பதை வெளிப்படையாகக் காட்டுவதாக மாலன் கூறுகிறார்.

குறிப்பாக விஜய் தனது பிரசாரங்களில் தொடக்கத்தில் இருந்தே ஒரு விஷயத்தை தெளிவாகக் குறிப்பிட்டு வந்தார். தனது கொள்கை எதிரி பாஜக எனவும் அரசியல் எதிரி திமுக எனவும் கூறிய விஜய் 'இந்தத் தேர்தலில் திமுகவுக்கும் தவெகவுக்கும் தான் போட்டியே இருக்கப் போகிறது என்பதை அழுத்தமாகக் குறிப்பிட்டு வந்தார்.

களத்தில் செயலாற்றியதை விடவும் துடிப்புடன் இளைய தலைமுறையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சமூக ஊடகங்களில் தவெக முழு வீச்சில் இயங்கி வந்ததாகவும் அதில் இளைஞர்களின் ஆதரவைப் பெருமளவில் பெற்றதாகவும் மூத்த பத்திரிகையாளர் மாலன் குறிப்பிடுகிறார்.

அவரது கருத்தை ஆமோதிக்கும் வகையில் பேசிய ராமு மணிவண்ணன், 'இந்தத் தேர்தலில் இளம் தலைமுறையினர் மற்றும் பெண்களின் வாக்கு வங்கி, முடிவுகளை நிர்ணயிப்பதில் முக்கியப் பங்கு வகித்துள்ளது. விஜய் நேரடியான பிரசாரத்தில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தினார் என்று கூறுவதை விட, அவரது தாக்கம் சமூக ஊடகங்களின் வாயிலாக இளைஞர்கள் மற்றும் பெண்களிடையே பெரிதாக இருந்தது எனக் கூறுவதே சரியாக இருக்கும்.

மகளிர் உரிமைத் திட்டம், புதுமைப் பெண் திட்டம் எனப் பல்வேறு வகையில் திமுக பெண்களின் ஆதரவைப் பெறுவதற்கு முயன்றது. ஆனால், விஜய் அதை முறியடித்து மகளிர் ஆதரவைத் தன் பக்கமாக ஈர்த்துள்ளார். முதல் தலை முறை வாக்காளர்கள், பெண் வாக்காளர்கள் இந்தத் தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்தவல்ல பிரிவுகளாகப் பார்க்கப்பட்டன. அந்த வாக்குகளை விஜய் முழுமையாகத் தன் பக்கம் ஈர்த்திருப்பதை இது காட்டுகிறது,' என்று கூறுகிறார் ராமு மணிவண்ணன்.

இந்தத் தேர்தலில், விஜயின் வருகை திமுகவுக்கு அப்படிக் கிடைத்து வந்த பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுபான்மை வாக்குகளைப் பிரித்து இருப்பதாக அரசியல் நிபுணர்கள் கருதுகின்றனர்.

விஜய் சென்னையின் நந்தனத்தில் தேர்தல் பரப்புரையில் பேசிய போது, மதச்சார்பற்ற சமூக நீதியே தனது கொள்கை எனவும் இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர்களுக்கான நபராகவே தான் எப்போதும் இருக்கப் போவதாகவும் கூறினார். அந்த வகையில் அவர் திமுக-வுக்கு பலமாக இருந்த சிறுபான்மை வாக்குகளைப் பிரித்து, தவெக பக்கம் ஈர்த்து விட்டதாக நிபுணர்கள் கருதுகின்றனர்.

## தி.மு.க. கூட்டணியில் இருந்த பிரச்சனைகள்

பேராசிரியர் ராமு மணிவண்ணனின் கூற்றுப்படி, திமுக கூட்டணியில் இருந்த விசிக, இடதுசாரி கட்சிகள், காங்கிரஸ் ஆகியவற்றுடன் ஒரு சுமூகமான சூழல் இருக்கவில்லை என்பதைத் தெளிவாகக் காண முடிந்தது.


கூட்டணியில் நிலவி வந்த சிக்கல்களும் பிரச்னைகளும் தேர்தல் பிரசாரத்தில் ஆக்கபூர்வமாக அவை பங்கெடுப்பதைத் தடுத்ததாகவும் அதன் விளைவுகளை இப்போது திமுக சந்திப்பதாகவும்' அவர் கூறுகிறார்.

இதே நிலை தான் அதிமுக கூட்டணியிலும் இருந்ததாகக் கூறும் ராமு மணிவண்ணன், இரு திராவிட கட்சிகளும் கூட்டணியை நிர்வகிப்பதைத் தவறவிட்டதன் பலன்களை தவெக அனுபவித்து வருவதாகத் தெரிவித்தார். மேலும், 'திமுகவில் அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மக்களுக்கு இடையே மிகுந்த இடைவெளி இருந்ததைக் காண முடிந்தது. இதுவும் முடிவுகளில் எதிரொலித்து இருக்கிறது,' என்கிறார் மூத்த பத்திரிகையாளர் மாலன்.


அதேநேரம், 'திமுக இந்த முறை மீண்டும் ஆட்சிக்கு வந்து விட முடியும் என மிகுந்த நம்பிக்கையைக் கொண்டிருந்தது. அதன் காரணமாக, கூட்டணிக் கட்சிகள் விஷயத்திலும் அதிகமாக ஆதிக்கம் செலுத்தியது. இது ஏற்படுத்திய அதிருப்தி களத்தில் கூட்டணிக் கட்சிகளின் செயல்பாடுகளைப் பாதித்தது,' என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த 2024 நாடாளுமன்ற தேர்தலில் இருந்தே ஆட்சி எதிர்ப்பு மனநிலை இருந்து வருவதைப் பார்க்க முடிகிறது.(18ம் பக்கம் பார்க்க)


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?





மேடராசி அன்பர்களே! விருப்பத்திற்கு மாறாக காரியங்கள் நடந்தாலும் முடிவு சாதகமாக இருக்கும். வீண் ஆசைகள் மனதில் தோன்றும். கட்டுப்பாட்டுடன் இருப்பது நல்லது. வீண் விவகாரங்களில் தலையிடாமல் இருப்பதும் நன்மை தரும். பேச்சில் நிதானம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் திடீர் தடை ஏற்படலாம். உத்யோகஸ்தர்கள் சக ஊழியர்களை அனுசரித்து செல்வது நல்லது.





ரிஷபராசி அன்பர்களே! எந்த ஒரு விஷயத்திலும் முடிவு எடுப்பது தாமதமாகும். அடுத்தவர் பிரச்னைகளில் தலையிடுவதை தவிர்ப்பதும் நல்லது. பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சனைகள் தீரும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத குறுக்கீடுகள் ஏற்பட்டு பின்னர் விலகும். கணவன், மனைவி அனுசரித்து செல்வதன் மூலம் அமைதி ஏற்படும்.





மிதுனராசி அன்பர்களே! புத்தி சாதூரியமும் அறிவு திறனும் அதிகரிக்கும். எதைச் செய்வது எதை விடுவது என்ற மன தடுமாற்றம் ஏற்பட்டு நீங்கும். எதிர்பார்த்த பண வரவு தாமதப்படும். அடுத்தவரிடம் உங்களது செயல் திட்டங்களை பற்றி கூறுவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் அவசரமான முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது.





கடகராசி அன்பர்களே! எடுத்த காரியங்கள் முடிவதில் தாமதப் போக்கு காணப்படும். தேவையற்ற மனச்சஞ்சலம் உண்டாகலாம். யாரையும் நேருக்கு நேர் எதிர்க்காமல் அனுசரித்து செல்வது நன்மை தரும். வயிறு தொடர்பான நோய்கள் ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரம் மெத்தனமாக காணப்பட்டாலும் பணவரவு இருக்கும். புதிய வாடிக்கையாளர் களிடம் நிதானமாக பேசி வியாபாரம் செய்வது நல்லது.





சிம்மராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் எதையும் சிறப்பாக செய்து முடிப்பீர்கள். எதிர்ப்புகள் விலகும். உங்களது செயல்களுக்கு முட்டுக்கட்டை போட்டவர்கள் விலகி விடுவர். முயற்சிகள் சாதகமான பலன் தரும். ராசிநாதன் செவ்வாயால் லாபம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத் தில் இருந்த போட்டிகள் அகலும். தடைப்பட்ட பண உதவி கிடைக்கும். மறைமுக எதிர்ப்புகள் நீங்கும்.




கன்னிராசி அன்பர்களே! கூடுதல் கவனத்துடன் செயல்பட வேண்டியது அவசியம். சுலபமாக முடிந்து விடும் என்று நினைக்கும் காரியம் கூட சற்று தாமதமாகலாம். ராசிக்கு 12ல் சஞ்சரிக்கும் ராசியாதிபதி புதன் மனதில் இருந்த கவலையை போக்கி நிம்மதி தருவார். அரசு மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும்.வெளியூர் பயணம் அதன் மூலம் அலைச்சல் உண்டாகலாம்.





துலாம்ராசி அன்பர்களே! செயல் திறமை அதிகரிக்கும்.நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த ஒரு வேலையை செய்து முடிப்பீர்கள். அரசு தொடர்பான பணிகளில் சாதகமான பலன் கிடைக்கும். தொழில், வியாபாரம் விரிவாக்கத்திற்கு தேவையான நிதியுதவி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பணிச் சுமை குறைந்து காணப்படும். குடும்பத்தினரிடம் நன்மதிப்பை பெறுவீர்கள்.





விருச்சிகராசி அன்பர்களே! ஆக்கப்பூர்வமான யோசனைகளை செயல்படுத்தி எதிலும் வெற்றி காண்பீர்கள். செயல் திறன் அதிகரிக்கும். நெருக்கடியான சமயத்தில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தாமதப்படும். தொழில், வியாபாரம் தொடர்பாக வீண் அலைச்சல் இருக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வதன் மூலம் கூடுதல் லாபம் கிடைக்க பெறுவீர்கள். கணவன், மனைவி மனம் விட்டு பேசுவது நன்மை தரும்.








தனுசுராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் ஆதாயம் உண்டாகும். தைரியம் அதிகரிக்கும். சகோதரர்களால் நன்மை உண்டாகும். காரிய வெற்றி ஏற்படும். எதிர் பாலினத்தாருடன் பழகும் போது கவனம் தேவை. எதிர்ப்புகள் குறையும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்களுக்கு கீழ் நிலையில் உள்ளவர்களால் லாபம் கிடைக்கும். பழைய பாக்கிகள் வசுலாகும்.




மகரராசி அன்பர்களே! எதிலும் சாதகமான நிலை காணப்படும். எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி உண்டாகும். புதிய நண்பர்கள் கிடைப்பர். தொலைதூரத்தில் இருந்து நல்ல தகவல்கள் வந்து சேரும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். லாபம் கூடும். பழைய பாக்கிகள் வசுலாகும். வியாபாரம், தொழில் தொடர்பான கடிதப் போக்கு சாதகமான பலன் தரும்.




கும்பராசி அன்பர்களே! இழுபறியாக இருந்த ஒரு காரியத்தில் சாதகமான பலன் கிடைக்கும். பேச்சினால் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் நீங்கி பிரிந்தவர்கள் மீண்டும் நட்பு பாராட்டுவார்கள். எதிர் பாராத உதவியால் நன்மை ஏற்படும். தொழில் வியாபாரம் தொடர்பாக இழுபறியாக இருந்த சில பிரச்னைகள் நல்ல முடிவுக்கு வரும். எதிர் பார்த்த பணம் வந்து சேரும்.




மீனராசி அன்பர்களே! எல்லாக் காரியங்களிலும் சாதகமான பலன் கிடைக்கும். எதிலும் லாபம் கிடைக்கும். திருமணம் தொடர்பான காரியங்கள் நல்லபடியாக நடந்து முடியும். நட்பு வகையில் கவனம் தேவை. தொழில், வியாபாரம் தொடர்பான விஷயங்களில் சாதகமான பலன் கிடைக்கும். எதிர் பார்த்த பண உதவி கிடைக்கும். கூட்டு தொழில் செய்பவர்கள் கவனமாக இருப்பது நல்லது.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# அறிவுக் கருவூலத்தின் திறவுகோல்

(21ம்பக்கத் தொடர்ச்சி) தளங்களில் முழுமையாகச் செலவிடுவதால், அவர்களின் கவனம் கல்வியின் பக்கம் செல்லாமல், தவறான பாதையில் செல்வதாக நாளும் வரும் செய்திகள் நாடுகளிடையே அச்சத்தை ஏற்படுத்தி வருகிறது.

16 வயதுக்கு கீழே உள்ள சிறார்களிடம் சுயநலமும், குரூர எண்ணங்களும், தவறான பழக்கங்களும் வளர்ந்து வருகின்றன. இதற்குக் காரணம் மாணவர்களிடையே செய்தித் தாள்கள் புத்தகங்கள் வாசிக்கும் பழக்கம் குறைந்து வருவது தான் என்பது அனைவரும் அறிந்ததே.

வாசிப்பு என்பது நிலையானது, கால வெள்ளத்தில் அழியாதது. அது நமக்கு தகவல்களை மட்டும் தருவதில்லை. நம் மனதை ஒருமுகப்படுத்துகிறது. கருத்துகளை ஒழுங்கமைக்கவும், அவற்றை தெளிவாகப் புரிந்து கொள்ளவும், சிந்தனையைத் தூண்டவும், பிறர்படும் துயரங்களையும், துன்பங்களையும் அறிந்து நம்மை நல்வழியில் பயணிக்கவும் உதவுகிறது. இதுதான் செய்தித் தாள்கள், புத்தகங்களின் பலம்.

ஒரு கலாசாரத்தை அழிக்க புத்தகங்களை எரிக்க வேண்டியதில்லை. மக்கள் அவற்றைப் படிப்பதை நிறுத்தி விட்டால் போதும் என்றார் அமெரிக்க எழுத்தாளர் ரே பிராட்பரி. நாட்டின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நிகழ்வுகளின் அனைத்து அம்சங்கள் குறித்த விரிவான மற்றும் புறநிலைத் தகவல்களை வழங்குவதே செய்தித்தாள் களின் முதன்மையான செயல்பாடாகும். எனவே, செய்தித்தாள்கள் உண்மைகளை முன்வைப்பது மட்டுமல்லா மல், அதன் ஆசிரியர் உரைகள் (எடிட்டோரியல்) மூலம் உண்மைகளின் விளக்கங்களையும், கருத்துகளின் சாராம்சங்களையும் வாசகர்களுக்கு வழங்குகிறது. மேலும், கருத்துகள் மற்றும் சித்தாந்தங்களையும் பரப்பி மக்களிடையே அறிவொளி பாய்ச்சுகின்றன.

எனவே, செய்தித்தாள்களையும், புத்தகங்களையும் நாளும் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு சமூகத்துக்கும், நாட்டுக்கும் பயனுள்ளவர்களாக வாழ்வோம்.உண்மையான வாசகன், வாசிப்பதை முடிப்பதே இல்லை என்றார் அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஆஸ் கார் வைல்ட் என்னும் எழுத்தாளர்.

# தி.மு.க - அ.தி.மு.கவை மீறி விஜய்க்கு

(17ம் பக்கத் தொடர்ச்சி) ஆனால், திமுகவில் கட்சிக்குள் இருக்கும் நிர்வாகக் கட்டமைப்பு மிகவும் உறுதியானது. அப்படிப்பட்ட கட்டமைப்பில், குறிப்பாக உள்ளூர் அளவிலான நிர்வாகத் தலைமைகளில் அதிருப்தி நிலவியது. அதைச் சரி செய்வதில் கட்சி கவனம் செலுத்தத் தவறிவிட்டது,' என்கிறார் திவ்யா.

இதேவேளையில், திமுகவின் கூட்டணிக் கட்சிகளுடைய நிலைமை அடுத்து என்ன என்பதையும் பார்க்க வேண்டியுள்ளது. விஜய் பிரசாரத்தின் போது தன்னுடன் கூட்டணி அமைக்கும் கட்சிகளுக்கு ஆட்சி அதிகாரத்தில் பங்கு தருவதாகக் கூறியிருந்தார். அதன் அடிப்படையில், 'தேர்தல் முடிவுகளைப் பொறுத்து திமுகவுடன் கூட்டணியில் இருக்கும் கட்சிகள் தவெக பக்கம் நகர்வதற்கான வாய்ப்புகள் ஏற்படலாம்' எனவும் கணிக்கப்படுகிறது.

அதற்கான சாத்தியங்கள் உள்ளதாகக் கூறுகிறார் மூத்த பத்திரிகையாளர் சிகாமணி. அது குறித்துப் பேசியபோது, 'காங்கிரஸ் கட்சி ஏற்கெனவே திமுகவுடன் கூட்டணியில் இருந்தாலும், கசப்புகளுடன் தான் இருந்து வருகிறது என்பது பல சந்தர்ப்பங்களில் வெளிப்பட்டன. அதேபோல, பிற கட்சிகளும் கூட தவெக-வுக்கு ஆதரவளிக்கும் முடிவை எடுக்கக்கூடும். அப்படியான சூழலை உருவாக்க தவெக முயற்சிகளை எடுக்க வாய்ப்புள்ளது.

அதிமுகவுடன் கூட்டணியில் இருக்கும் பாமக-வும் கூட தவெக பக்கம் திரும்புவதற்கான வாய்ப்புகள் உள்ளன. இருப்பினும் இவை எதையும் தற்போது உறுதியாகக் கூறிவிட முடியாது. என்ன நடக்கிறது என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும் என்று விவரித்தார்.

அதேநேரம், இந்தத் தேர்தல் முடிவுகள் பல செய்திகளைக் கூறுவதாகவும் திராவிட கட்சிகளுக்கு இதுவோர் எச்சரிக்கை மணியாக இருப்பதாகவும் கூறும் நிபுணர்கள், தேர்தல் வரலாற்றில் இது மிகவும் ஆழமாக ஆராயப்பட வேண்டிய தேர்தல் முடிவுகள் எனவும் கூறுகின்றனர்.

# தமிழர்களின் மனக்குறைகள் முழுமையாக..

(4ம் பக்கத் தொடர்ச்சி) முஸ்லிம் மக்களுக்கும் தனித்துவமான கலாசாரம் இருக்கிறது. இதில் எந்த கலாசாரம் உயர்ந்தது, எந்தக் கலாசாரம் தாழ்ந்தது என்று நாங்கள் கூற முடியாது. சகல கலாசாரங்களும் மதிக்கப்படவேண்டும். யுத்தத்தினால் ஏற்பட்ட அழிவுகளைப் பற்றி பேசுகையில், வடக்கிலிருந்து தெற்கு வரையான நிலைமைகளை நாம் பார்த்தோம்.


யுத்தத்தில் முதலில் இறப்பது மனிதாபிமானம். அந்த மனிதாபிமானத்தை இலக்கியத்தின் ஊடாக மீண்டும் நம்மால் கட்டியெழுப்ப முடியும் என்றார். நாம் மனிதத் தன்மை கொண்ட மனிதர்களாக இருக்கவேண்டும். அதற்காக ஒரு பாரிய சமூகம் தேவைப்படுகிறது. சகல கலைகளையும் சேர்ந்த தலைமுறைக்கு உண்மையான ஒரு சமூகம் இருக்கவேண்டும். அதற்கு, மிகவும் பலமான தமிழ் இலக்கியம் எமக்கு தேவை. அதேபோன்று ஒரு பலமான திரைப்படக் கலையை உருவாக்க வேண்டும். அந்த கடமை எனக்கு இருப்பதாக நான் நினைக்கிறேன். நமது மக்கள் எப்போதும் ஒன்றாகவும் ஒற்றுமையாகவும் இருப்பார்கள்!' என தனது நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்பினை ஜனாதிபதி உரையின்போது வெளிப்படுத்தினார்.

# என்னை ஏன் ஏமாத்தணும்?

(14ம் பக்கத் தொடர்ச்சி) விட 17.43 இலட்சம் வாக்குகளை மட்டுமே கூடுதலாகப் பெற்றுள்ளது. நமக்கும் அவர்களுக்குமான வாக்கு விழுக்காடு வேறுபாடு என்பது 3.52 விழுக்காடு மட்டுமே. என்னைப் பொறுத்தவரையில் தமிழ் நாட்டு மக்கள் நம் மீது வைத்துள்ள நம்பிக்கையை வலிமையானதாகவே கருதுகிறேன். உங்களால் உருவாக்கப்பட்ட எனக்கு, உங்களது வலிமையால் வலிமை பெற்ற எனக்கு நீங்கள் உடனிருக்கும் வரை என்ன கவலை? நாம் அனைவரும் தலைவர் கலைஞரின் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகள். அந்த உணர்வோடு தொடர்ந்து நாம் பயணிப்போம். உங்கள் உழைப்பால் விளைந்த அறுவடைதான் 1.54 கோடி வாக்குகள். உங்கள் உழைப்புக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்? தலைமைத் தொண்டன் என்ற உணர்வோடு நாம் தொடர்ந்து பயணிப்போம். ஆளும் கட்சியாக இருந்தால் மக்களுக்கான திட்டங்களைத் தீட்டுவோம். எதிர்க்கட்சியாக இருந்தால் மக்களுக்கான கோரிக்கைகளுக்காகவே போராடுவோம். அந்த வகையில் இப்போது வலிமையான எதிர்க்கட்சியாக இருப்போம்.

# காணி உரிமையாளர்கள் தவறிழைத்து விட்டார்கள்! இது குற்றவாளிகள் எழுதும் தீர்ப்பு!

தையிட்டியில் பௌத்த விகாரையொன்றைக் கட்டுவதற்கும் அதனை விரிவுபடுத்துவதற்குமாக ஆக்கிரமிக்கப்பட்டிருந்த தனியார் காணிகளை இனங்கண்டு அளவீடு செய்வதற்காகத் திட்டமிட்டிருந்த நடவடிக்கை இரண்டாவது முறையாகவும் தடைப்பட்டு விட்டது. அரச விடுமுறை நாள் ஒன்றில் திடீரென காணி உரிமையாளர்களை அழைத்து அடுத்து வரும் நாளில் காணி அளவிடப்படும் எனக் கூறிய யாழ் மாவட்ட அரச அதிபர் அதற்காகத் தையிட்டியில் மக்களைக் காத்திருக்க வைத்து விட்டு கால தாமதமாக அவ்விடத்துக்கு வருகை தந்து அளவீட்டு நடவடிக்கைகள் பிற்போடப்பட்டுள்ளதாக அரசாங்கத்தின் அறிவுறுத்தலை ஒப்புவித்து விட்டுச் சென்றதுடன் முதலாவது அளவீட்டு முயற்சி தடைப்பட்டது.



தையிட்டி விகாரை காணியின் வரைபடம்

பின்னர் கடந்த 29 ஆம் திகதி திட்டமிடப்பட்ட அளவீட்டு முயற்சி அங்கு வருகை தந்திருந்த காணி உரிமையாளர்களின் நியாயமான ஐயங்களின் அடிப்படையில் எழுந்த கோரிக்கைகளை முழுமையாக நிறைவேற்ற முடியாத அல்லது நிறைவேற்ற விரும்பாத அரசாங்க அதிகாரிகளின் செயற்பாடுகளால் இரண்டாவது தடவையும் தடைப்பட்டு விட்டது.

ஆனால் இத்தடைக்கு நியாயமற்ற நிபந்தனைகளை முன்வைக்கும் காணி உரிமையாளர்களே பிரதான காரணம் என அரச அதிகாரிகள் மற்றும் அரச தரப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமன்றித் தனது மக்களுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய நிலையிலுள்ள வலி வடக்குப் பிரதேச சபையின் தவிசாளரும் குற்றஞ்சாட்டுவதைக் காணமுடிகிறது. அது மட்டுமன்றி காணி உரிமையாளரை இத்தகைய தவறான நடவடிக்கைகளுக்குத் தள்ளுவது தமிழ்த் தேசிய முன்னணியும் கஜேந்திரகுமாருமே என்றும் அவர்கள் கூறுவதையும் காணமுடிகிறது.

உண்மையில் இவ்விடயத்தில் தவறிழைப்பவர் யார்? அல்லது குற்றஞ்சாட்டப்படவேண்டியவர் யார்? சட்டரீதியற்ற திஸ்ஸ விகார நிர்மாணம் தொடர்பான நடவடிக்கைகள் யுத்தம் நிறைவு பெற்று ஒரு தசாப்தத்தின் பின் 2018 ஆண்டுக்கும் 2023 சம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பிரதேச சபை உட்பட தொடர்புடைய எந்தவொரு திணைக்களங்களிடமிருந்தும் தேவையான ஒப்புதல்கள் எவையும் பெறப்படாது, முற்று முழுதாகப் பிறருரித்துக் காணிகளை அத்துமீறி கையகப்படுத்தி அடாத்தாக மேற்கொள்ளப்பட்ட தொரு நிர்மாணம் என்றவகையில் இது சட்ட விரோதமானது. இந்தச்சட்டரீதியற்ற நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொண்டவர்கள் வேறு யாருமல்லர்.

அன்பையும் அறத்தையும் ஒழுக்கத்தையும் போதித்த புத்தனின் போதனைகளைச் செய்வதாகச் சொல்லும் பௌத்த துறவிகள் தான். அதற்கு அனுசரணை வழங்கியவர்கள் சட்டத்தைப் பாதுகாக்க வேண்டிய அரச அதிகாரிகள், காவல்துறை மற்றும் படைத்துறை போன்ற அரச பணியாளர்கள். இது வேலியே பயிரை மேய்ந்த கதை. தொடக்கத்தில் இச்சட்டரீதியற்ற விகாரைக்கான அடிக்கல் 2018 ஆவணி 22 ஆம் திகதி, நல்லாட்சி என்று அவர்களே அழைத்துக் கொண்ட மைத்திரி ரணில் ஆட்சிக்காலத்தில் அவர்களின் வடக்குக்கான ஆளுநர் ரெஜினோல்ட் கூரே அவர்களினால் இடப்பட்டது. அக்காலத்தில் அரச அதிபராக இருந்தவர் தற்போதைய ஆளுநர் வேதநாயகன் என்பதும், தையிட்டி அமைந்துள்ள வலிவடக்குப் பிரதேச சபையின் அப்போதைய தலைவராக இருந்தவர் இப்போதும் தலைவராக இருக்கும் சுகிர்தன் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமன்றி உத்தியோகப்பற்றற்ற துணைப்பிரதமர் சுமந்திரன் என்று சொல்லப்பட்ட காலமும் இதுதான். பின்னர் தற்போது உயர்ந்து நிற்கும் தூபி அல்லது தாதுகோபத்திற்கான அடிக்கல் 2021 ஜனவரி 30 ஆம் திகதி ஜனாதிபதி கோதாபயவின் ஆட்சிக்காலத்தில் இராணுவத்தளபதி சவேந்திரசில்வாவினால் இடப்பட்டது. இராணுவத்தின் பங்களிப்புடன் கட்டுமாணம் மிகவேகமாக நடைபெற்று 2023 மே 25 இல் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

தமிழ் பாரம்பரிய வாழ்விடங்களை அபகரிப்பதற்காக வழமையாகச் பௌத்த சிங்கள பேரினவாதிகளால் புனையப்பட்டுவரும் வழமையான கதைகளின் தொடர்ச்சியே தையிட்டி தொடர்பாகவும் முன்வைக்கப்படுகிறது. சங்கமித்த வெள்ளரசு மரக் கிளையுடன் இலங்கைக்கு வருகை தந்த போது தையிட்டியில் ஓய்வு எடுத்துக் கொண்டதாகவும் பின்னர் அவர் மன்னன் தேவநம்பிய தீசனைச் சந்தித்த போது தான் ஓய்வெடுத்த தையிட்டியில் ஒரு விகாரையை கட்டுமாறு கேட்டுக் கொண்டதாகவும் அதற்கமைய அம்மன்னனால் கட்டப்பட்ட புனிதத்தலமே தையிட்டி திஸ்ஸ விகாரை என்று முன்னாள் கடற்படைத் தளபதியும் அரசியல்வாதியுமான சரத் வீரசேகர போன்ற தீவிர பேரினவாதிகள் கதையளந்து வருகின்றனர்.

ஆனால் அதற்கான உறுதியான வரலாற்றாதாரங்கள் எவையுமில்லை. தையிட்டியில் தற்போது அமைக்கப்பட்டுள்ள விகாரைக்கு சற்றுத் தொலைவில் ஒரு காணியில் 1946ஆம் ஆண்டிலிருந்து பேக்கரி போன்ற சில தொழில்களில் ஈடுபட்டு வந்த சிங்கள பௌத்த குடும்பத்தினர் சிலர் வழிபடுவதற்கான சிறிய வழிபாட்டு இடமொன்று மட்டும் 1990இல் தாம் இடம்பெயரும் வரை இருந்ததென்று அப்பிரதேச மக்கள் கூறுகின்றனர். அந்த வழிபாட்டு இடம் அமைந்த காணி கூட அதன் உரிமையாளரான தமிழரினால் இன்னொருவரிடம் ஈடு வைக்கப்பட்டு மீளமுடியாது நிலையில் அது வேறொருவருக்கு விற்பனை மூலம் கைமாறப்பட்டு பின்னர் பௌத்த வழிபாட்டுக்குக் கையளிக்கப்பட்டதாக அம்மக்களால் கூறப்படுகிறது. குறித்த இக் காணிக்கான உரித்து ஆவணங்கள் தன்னிடம் இருப்பதாக குறித்த தையிட்டி திஸ்ஸ விகாரை மற்றும் நயினாதீவு நாகவிகாரை ஆகியவற்றின் விகாராதிபதியான நவதகல பதுமகீர்த்தி திஸ்ஸ நாயக தேரர் கூறுகிறார்.


அது மட்டுமன்றி தற்போது அமைக்கப்பட்டுள்ள விகாரை தனியார் காணிகளிலேயே அமைக்கப்பட்டுள்ளது என்றும் அது சட்டத்துக்குப் புறம்பானது என்றும் கூறுவதுடன் அத் தவறான செயலைச் செயததற்காக குறித்த விகாரைக்கு தற்போது பொறுப்பாக உள்ள நந்தராம தேரர் மீது அவர் குற்றமும் சுமத்துகிறார்.

அத்துடன் இக்கருத்தை யாழ்ப்பாண நாகவிகாரையின் அதிபதி மீகஹஜந்துரே விமலநாயக்க தேரரும் உறுதிப்படுத்துகிறார். இந்த வகையில் தமிழ்த் தரப்புகள் மட்டுமன்றி குடாநாட்டில் நீண்டகாலமாக இருக்கும் முக்கிய விகாராதிபதிகளே தற்போது விகாரை அமைக்கப்பட்டிருக்கும் காணி அதற்குச் சொந்தமானது இல்லை என்று உறுதிப்படுத்தியுள்ளனர்.

எனவே இப்பிரச்சினை வழமையான குடிசார் காணிப் பிணக்குடன் தொடர்புபட்டதொன்றாகும். அதாவது அடிப்படையில் காணியின் உண்மையான உரித்தாளர்களுக்கும் காணியைச் சட்டவிரோதமாக கையகப்படுத்தியவருக்கும் இடையிலான ஒரு குடிசார் பிணக்கு மட்டுமே.

இவ்வாறான காணிப்பிணக்குகளைத் தீர்ப்பதற்கு தேவையான சட்டங்களும், நடைமுறை வழிகாட்டுதல்களும் இலங்கையில் தாராளமாகவே உள்ளன. காணிப்பிணக்குகள் தொடர்பான குடிசார் சட்டங்கள், வடக்குக்கான தேச வழமைச் சட்டம், காணி அளவிடுவது தொடர்பான 17.:.2002 பிந்திய நிலள வீட்டுச் சட்டம் மற்றும் உள்ளூராட்சி சட்டம் போன்றன இருக்கும்போது அவற்றிற்கமைய இப்பிணக்கினை

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
-க. அருந்தவபாலன் -



அணுகுவதே அரசாங்கத்தினதும் தொடர்புபட்ட ஒவ்வொரு அதிகாரிகளினதும் கடமையாகும். அவ்வாறே நாட்டில் ஏனைய பகுதிகளில் எல்லா விடயங்களிலும் இடம்பெற்று வருகின்றன. நடைமுறைகள் அப்படியிருக்க இந்தப் பிணக்கில் மட்டும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அப்பாற்பட்ட நடவடிக்கைகள் ஏன்? போதைப்பொருட்கள் கடத்திய குற்றம் தொடர்பாக தேரர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்ற கேள்விக்கு அமைச்சரும் ஊடகப் பேச்சாளருமாகிய நளிந்த திசநாயக்க அண்மையில் பதிலளிக்கும்போது சட்டம் அனைவர்க்கும் சமமானது என்று கூறினார். அவ்வாறாயின் தையிட்டியில் மட்டும் சட்டத்தை மீறியவர்க்கு சார்பாக அரசாங்கமும அதன் ஆளணியினரும் செயற்படுவது ஏன்? ஏனெனில் இந்த நாட்டில் சிறுபான்மைத் தேசிய இனங்களின் உரிமைகள் என்று வரும்போது அங்கு சட்டங்களைவிட பெரும்பான்மையினரின் விருப்பமே மேலோங்கும் என்பது எழுதப்படாத விதியாக உள்ளது. அதிலும் பௌத்தமும் தேரர்களும் சட்டத்தை விட மேலானவர்கள். வெசாக் காலத்தில் வரும் தமது பண்டிகையை இஸ்லாமியர் எவ்வாறு கொண்டாடவேண்டும் என்பதை மகா நாயக்கர்களே தீர்மானிப்பார்கள் என்று மாற்றத்தை ஏற்படுத்தப் போவதாகக் கூறிப் பதவியைப் பெற்ற முற்போக்குத் தோழர்களின் பதில் இதற்கான அண்மிய உதாரணம்.

சரி, அரசாங்கம் கூறுவது போல இக் காணிப் பிரச்சினையில் பௌத்த விகாரை தொடர்புபட்டுள்ளதால் ஒரு விசாரணைக்குழு மூலம் சுமுகமாகத் தீர்வு காணப்படுவது ஆரோக்கியமானது என்ற வாதத்தை ஏற்றுக் கொள்வோம். அவ்வாறாயின் ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவரின்கீழ் இதனை அமைத்திருக்க வேண்டுமல்லவா? இதில் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு அல்லவா முக்கியம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் பௌத்த சாசன அமைச்சு அதிகாரிகள் தலைமையில் இக்குழு அமைக்கப்பட்டதன் நோக்கம் என்ன?

பௌத்த சாசன அமைச்சில் பதிவு செய்யப்படாத சட்டரீதியற்ற வழிபாட்டு இடத்துக்கு அவ்வமைச்சு அதனது பிரதிநிதித்துவத்தை வழங்க வேண்டிய அவசியம் என்ன? இவ்விடயத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட குருந்தூர் விகாரையின் தேரர் தொடர்புபடுவது ஏன்? இக்குழுவில் காணி உரிமையாளர்களின் (20ம் பக்கம் பார்க்க)

# காணி உரிமையாளர்கள் தவறிழைத்து விட்டார்கள்! இது குற்றவாளிகள் எழுதும் தீர்ப்பு!

(19ம் பக்கத் தொடர்ச்சி) பிரநிதிகளும் இடம்பெறுவர் என்று கூறப்பட்டுள்ளது. அவர்கள் எந்தவொரு கூட்டத்துக்கும் அழைக்கப்படவில்லை என்பதுடன் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள், முடிவுகள் எல்லாமே அவர்களுக்கு இருட்டடிப்புச் செய்யப்பட்டு ள்ளன. குற்றஞ்சாட்டப்பட்ட பிரதிவாதி, அதாவது சட்டத்தை மீறிய தேரர் தீர்மானம் எடுப்பதில் பங்குபற்ற முடியும், ஆனால் வாதிகள் அதாவது சட்டத்துக்கு அமைய நடப்பவர்கள் அதில் பங்குபற்ற முடியாது. அப்படியானால் இந்த விசாரணைக்குழு நேர்மையாக நடக்கும் எனக் காணி உரிமையாளர்களால் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? இக்குழுவின் தீர்மானங்களில் காணி உரிமையாளர்கள் எவ்வகையில் நம்பிக்கை கொள்ள முடியும்?

அவரே கூறி விட்டார் இப்போது விகாரை அமைந்திருப்பது அதற்குரிய காணியல்ல என்று. உண்மையில் அவரிடமிருப்பதாகக் கூறப்படும் அக் காணி ஆவணங்களைப் பரிசீலனை செய்து விகாரைக்குரிய காணியை இலகுவாக அடையாளங்கண்டு கொண்டு ஏனைய காணிகளை அதன் உரிமையாளர்கள் வழமையான நடைமுறையில் தாங்களாகவே அளந்து எல்லைப்படுத்த அனுமதித்திருக்கலாமல்லவா? இங்கே தவறுகளைத் திருத்துவதற்குப் பதிலாகச் செய்யப்பட்ட தவறுகளைச் சரியாக்கும் முயற்சி அல்லவா மேற்கொள்ளப்படுகிறது? இவ்வாறு சரியானதும் இலகுவானதும் ஆன வழி முறைகளைக் கைவிட்டு விட்டு ஆக்கிரமிக்கப்பட்ட காணிக்கு சட்ட அங்கீகாரம் வழங்குவதற்கு முனைபவர்கள் தவறிழைக்கிறார்களா? அல்லது காணி உரிமையாளர்கள் தவறிழைக்கிறார்களா?

கடிதத்தை வழங்கும் அதிகாரம் அக் குழுவினர்க்கோ அல்லது அரச அதிகாரிகளுக்கோ கிடையாது. அது மட்டுமன்றி அவர்கள் அதற்கு எவ்வாறு பொறுப்பெடுக்க முடியும்? அந்த உண்மையை அதிகாரிகள் காணி உரிமையாளருக்கு நேர்மையான முறையில் தெளிவுபடுத்தியிருக்கலாம். அதை விடுத்து அதிகாரிகள் பிழையான கடிதமொன்றைக் கொடுத்து காணி உரிமையாளரை ஏமாற்ற முனைந்ததுடன், நியாயமற்ற நிபந்தனைகளை விதித்து அளவீட்டைக் குழப்பி விட்டார்கள் என அவர்கள் மீது குற்றஞ்சாட்டுவதை எந்த வகையில் நியாயமாகும்?

காற்றாடிகளுக்குக் கீழிருந்து கருமமாற்றுபவர்களை விட காயப்பட்டவர்க்குத் தான் அதன் வலி தெரியும். காணி உரிமையாளர் மீது குற்றஞ்சாட்டும் அரச அதிபர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் பவானந்தராசா போன்றோர் தங்கள் மனசாட்சியைத் தொட்டுக் கேட்டால் தெரியும் இவ்விடயத்தில் தவறிழைப்போர் யார் என்பது. என்ன செய்வது அவர்களுக்கு மனச்சாட்சி இருந்திருந்தால் இந்தப் பதவிகளுக்கே வந்திருக்க முடியாதே. தற்போது இவ்விடயத்தில் மௌனமாக இருக்கும் முன்னாள் அரச அதிபரும் தற்போதைய ஆளுநருமான நாகலிங்கம் வேதநாயகனுக்கும் இது பொருந்தும்.


காணி உரிமையாளர்கள் கோரியவாறு கடிதமொன்றை வழங்க முடியாமைக்கான காரணம் சம்பந்தபட்டவர்கள் வெவ்வேறு திணைக்களங்களைச் சேர்ந்தவர்களாக இருப்பது என்றொரு காரணம் முன்வைக்கப்பட்டு அக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது. நினைத்தால் நிர்வாகத்தில் மாற்று

அளவிடப்படும் தமது காணிகள் தமக்கே வழங்கப்படும் என்று பொருத்தமான கடிதத் தலைப்பில் உறுதியுரை தரவேண்டும் என அரச அதிகாரிகளை வற்புறுத்தி காணி உரிமையாளர்கள் தவறிழைத்து விட்டனரா? ஆம் தவறிழைத்து விட்டனர். இன்னொரு நாட்டுத் தலைவருடன் செய்து கொண்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்தை, தமிழ் அரசியல் தலைவர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை இந்த நாட்டின் அரசியல் தலைவர்களே மதிக்காதபோது அரசாங்கத்தின் எடுபிடிகளான அரச அதிகாரிகளின் உறுதியுரைக்கு அல்லது கடிதத்துக்கு என்ன மதிப்பு இருந்து விடப் போகிறது என்பதை அறியாது அவ்வாறான கடிதத்தைக் காணி உரிமையாளர் கேட்டது அவர்களின் தவறு தான்.

உண்மையில் அவர்கள் அக்கடிதத்தைக் கேட்டது அளவீட்டைக் குழப்புவதற்கல்ல. அது அரச தரப்பு மீதான நம்பிக்கையீனத்தின் உச்ச நிலை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். கடந்தகால ஆட்சியாளர்களின் ஏமாற்றுக்கள், சமகாலத்திலும் தனியார் காணிகளைக் கையகப்படுத்தும் அரசாங்கத்தின் முயற்சிகள் தொடர்வது, குறித்த இப்பிரச்சினை தொடர்பாக 'அ' தொடங்கி '.:.' வரையிலான அரசாங்கத்தின் அணுகுமுறைகள் எவையும் நம்பிக்கை தராமை போன்றனவே காணி உரிமையாளர்களை அத்தகைய நிலைக்குத் தள்ளியுள்ளன என்பதைப் புரிந்து கொள்வது கடினமான விடயமல்லவே.

மறுபுறத்தில் அவ்வாறானதொரு ஏற்பாடுகளுக்கு வழியிருக்கவே செய்யும். அடி முடியில்லாத ஒரு கடிதம் மீது மற்றவர்கள் நம்பிக்கை வைக்க வேண்டும் என எதிர்பார்க்கும் அரச அதிபர் அக்கடிதத்தில் முதலில் தான் நம்பிக்கை வைத்து 'அளவீடு செய்யப்படும் காணிகள் அவற்றின் உரிமையாளர்களுக்கே வழங்கப்படும் என்று அனைத்து உறுப்பினர்களும் கையொப்பமிட்டு உறுதியளித்ததன் அடிப்படையில், இம்மாவட்டத்தின் அனைத்து அரச கருமங்களுக்கான அதிகாரத்தைக் கொண்டவன் என்ற வகையிலும், அக்குழுவின் ஒரு உறுப்பினன் என்றவகையிலும் அதற்கான உறுதியை இத்தால் அளிக்கிறேன்' என மற்றவர்கள் ஒப்பமிட்ட கடிதத்தையும் இணைத்து ஒரு கடிதத்தை தனது கடிதத் தலைப்பில் அரச அதிபர் வழங்குவதில் எந்தப் பிரச்சினையும் எழப் போவதில்லை. ஆனால் இங்கு பிரச்சினை கடிதமன்று. பொறுப்புக்கூறலே. இங்கு யாரும் பொறுப்பெடுக்கத் தயாராகவில்லை என்பதுடன் அவ்வாறு பொறுப்பெடுக்க முடியாது என்பதே நிதர்சனமான உண்மை.

'நல்லது செய்யப் பிறந்த நீ தீமையை யாவது செய்யாதிரு' என்றொரு வாக்கியம் உண்டு. இவ்விடயத்தில் இவ் வாக்கியம் வலிவடக்கு பிரதேச்சபைத் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தனுக்குக் கச்சிதமாகப் பொருந்தும். காணி உரிமையாளரின் உரிமைகளை நிலை



தையிட்டி விகாரை காணியின் வரைபடம்

நாட்டுவதில் மற்றெல்லோரையும் விட சுகிர்தனுக்கே கூடிய பொறுப்பு உள்ளது.

யுத்தம் நிறைவடைந்த பின் 2011 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையும் தையிட்டி அமைந்துள்ள வலிவடக்குப் பிரதேச சபையின் தவிசாளராக அவரே இருந்து வருகிறார். அவரது பதவிக் காலத்திலேயே இந்த சட்ட விரோத கட்டுமாணங்கள் இடம் பெற்றுள்ளன. அதனைத் தடுப்பதற்கு அவர் எடுத்த முயற்சிகள் எவை? குறைந்தது உள்ளூராட்சி அதிகார சபை அதிகாரத்தின் கீழ் அதற்கெதிராக வழக்கொன்றையேனும் அவர் தொடுத்திருந்தாரா? வழக்குத் தொடுக்கவுள்ளதாக காணி உரிமையாளருக்கு வாக்குறுதி அளித்திருந்ததுடன் அது தொடர்பாக ஊடகங்களிலும் தெரிவித்திருந்தார். ஆனால் இதுவரை அவ்வாறு எதுவும் செய்யவில்லை. அது மட்டுமல்ல அண்மையில் கூட இது தொடர்பாக சபையில் ஒரு மனதாக எடுத்த தீர்மானங்களைக் கூட அவர் நடைமுறைப்படுத்த முனையவில்லை.

அதற்கு மேலாக இவ்விகாரைக்கு முதலில் அடிக்கல் நட்ட காலத்தில் இவரது கட்சி பெயரளவில் எதிர்க் கட்சியாக இருந்து அதன் நலன்களைப் பெற்றுக் கொண்டு ஆளுங் கட்சியுடன் தேனிலவில் இருந்தது. அந்தச் செல்வாக்கைப் பயன்படுத்தியேனும் அந்நேரத்தில் ஒரு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொடுத்திருக்கலாம். ஆனால் எதுவுமே செய்யவில்லை. சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டிய பொறுப்பிலுள்ள தவிசாளர் அதைச் செய்யாது விட்டது மட்டுமன்றி அந் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய விழாக்களில் கலந்து கொள்கிறார் எனில் அவர் மீது அம் மக்கள் எவ்வாறு நம்பிக்கை வைப்பார்கள்?

இந்த விடயத்தில் சுகிர்தன் இரட்டை வேடம் போட்டதாக காணி உரிமையாளர்கள் வெளிப்படையாக சாட்டுகின்ற குற்றச்சாட்டுகளுக்கு அவர் என்ன பதிலைச் சொல்லப்போகிறார்?

இவ்விடயத்தில் தமிழ்த் தேசிய முன்னணி தடையாக உள்ளது என்று குற்றஞ் சாட்டுவது எவ்வளவு தூரம் உண்மையானது? உண்மையில் இப்பிரச்சினையை இந்தநிலைவரை முன்னுக்குக் கொண்டு வந்தது அக்கட்சி என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் தொடங்கி இன்றுவரை அதற்காகத் தொடர்ச்சியாகக் களத்தில் போராடுங் கட்சி அது மட்டும் தான். அந்த நேரத்தில் நாலு தலைகள் கூடி என்னத்தைப் புடுங்கப் போகிறார்கள் என்று நாம் அனைவரும் அவர்களைப் பார்த்து நையாண்டி செய்து கொண்டிருந்தோம் என்பது தானே உண்மை.

பிரதேச சபைத் தவிசாளர் என்ற வகையில் அவரும், தமிழர்களின் முதன்மைக் கட்சி என்றவகையில் அவர் சார்ந்த கட்சியும் காணி உரிமையாளர்களின் நம்பிக்கையைப் பெறும் வகையில் செயற்பட்டிருந்தால் அவர் குற்றஞ் சாட்டுவது போல அவர்கள் தமிழ்த் தேசிய முன்னணியின் பின்னால் ஓட வேண்டிய தேவை எழுந்திருக்காதே. இவ்விடயத்தில் சுகிர்தன் மற்றவர்களைக் குற்றஞ் சாட்டுவதை விடுத்து தன்னையும் தனது கட்சியின் செயற்பாடுகளையும் சுயவிமர்சனம் செய்தால் உண்மையில் யார் தவறிழைத்துள்ளார்கள் என்பதை தெரியவரும்.

உண்மையில் தையிட்டிக் காணிப் பிரச்சினையில் தவறிழைப்பவர்கள் காணிகளின் உரிமையாளர்கள் அல்லர். அரசாங்கங்களும் அவர்கள் கூறுவதைச் செய்யும் அதிகாரிகளும் அரசுக்குச் சார்பாக இருந்துவரும் அரசியல் வாதிகளுமே அத்தவறுகளைத் தொடர்ந்து செய்து வருகின்றனர். அந்த வகையில் இவ்விடயத்தில் குற்றவாளிகள் தீர்ப்பு வழங்க முனைகிறார்கள் என்பதே உண்மை.

# அறிவுக் கருவூலத்தின் திறவுகோல்

-ராதா கிருஷ்ணன் -

இன்றைய இணையயுகத்தில் எல்லா திசைகளிலிருந்தும் தகவல்கள் பெருக்கெடுத்து வருகின்றன. தகவல் தொழில்நுட்பப் புரட்சியால், தொலைக்காட்சி, ஃபேஸ்புக், வாட்ஸ்-ஆப், ,ன்ஸ்டாகிராம், எக்ஸ் என பல சமூகவலைதளங்கள் மூலம் உடனுக்குடன் செய்திகள் நம்மை வந்தடைகின்றன. எனினும், மக்களின் மனதோடு நெருக்கமானதாகவும், சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகவும் பன்னெடுங்காலமாக செய்தித்தாள்களும், புத்தகங்களும் விளங்கி வருகின்றன.

மின்னணு ஊடகங்கள் வருவதற்கு முன்பு, அச்சு ஊடகங்கள் மக்களுக்குத் தகவல்களைப் பரப்புவதில் முக்கியப் பங்கு வகித்தன. சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் பத்திரிகையாளர்கள், அரசியல்வாதிகள், இலக்கியவாதிகள் தன்னார்வலர்கள் ஆகியோருக்கு சிறந்த நண்பராக புத்தகங்கள் உள்ளன.

புத்தக வாசிப்பு என்பது உலக நடப்பை அறியவும், மொழித் திறனை மேம்படுத்தவும், சமூகங்களிடையே நல்லுறவை வளர்க்கவும், மனிதர்களைப் புரிந்து கொள்ள உதவும் ஒரு முக்கியமான கருவியாகவும் விளங்குகிறது.

மக்களிடையே அறியாமை இருளை அகற்றி, அவர்களின் சிந்தையில் ஒளியேற்றும் கைவிளக்காகவும், அறிவுக் கருவுலத்தின் திறவுகோலாகவும் புத்தகங்கள் உள்ளன.

சாதாரண மக்களுக்கு சமூகத்தை ஒட்டு மொத்தமாக அறிந்து கொள்ளக்கூடிய சக்தியை செய்தித்தாள்கள் அளிக்கின்றன. வாளின் முனையைவிட பேனாவின் முனை கூர்மையானது என்பார்கள். எழுத்தின் தாக்கம் சக்தி வாய்ந்தது, ஆயுதத்தை விட வலிமையானது. ஒரு கத்தி உடலுக்கு காயத்தை ஏற்படுத்தலாம். ஆனால், ஒரு பேனா, ஒருவரின் மனதில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தி, சிந்தனையை வளர்த்து, சமூகத்தில் மாற்றத்தையும் கொண்டு வரும்.

பத்திரிகைகள் ஜனநாயகத்தில் நான்காவது தூணாக விளங்கி வருகின்றன. இது பேச்சு, கருத்துச் சுதந்திரத்துக்கான உரிமையை சட்டத்துக்கு உட்பட்டு பயன்படுத்துகின்றன. ஜனநாயகத்தின் முக்கிய காவலாளியாக பத்திரிகைகள், அச்சு ஊடகங்கள் செயல்படுகின்றன. அரசமைப்புச் சட்டம் உறுதி அளித்துள்ள கருத்துச் சுதந்திரம் என்பது, நம் ஜனநாயகத்தின் அழகு என சென்னை உயர்நீதி மன்றம் அண்மையில் தெரிவித்துள்ளது.

ஜனநாயகத்தின் சரியான செயல்பாட்டிற்கு பத்திரிகை சுதந்திரம் ,ன்றியமையாதது. எனினும், பத்திரிகைச் சுதந்திரம் முழுமையான, வரம்பற்றது மற்றும் எல்லா



நேரங்களிலும், எல்லாச் சூழ்நிலைகளிலும் கட்டுப்பாடற்றது அல்ல. ஏனெனில், அது ஒழுங்கின்மை, அராஜகத்துக்கு வழிவகுக்கும் என 1997ஆம் ஆண்டில் இந்திய உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பத்திரிகைச் சுதந்திரம் பொறுப்புடனும், பொறுப்பு மற்றும் பொது ஒழுங்கு, ஒழுக்கம் போன்றவற்றுக்கான நியாயமான கட்டுப்பாடுகளுடன் இயங்க வேண்டும் என்பதை இந்தத் தீர்ப்பு வலியுறுத்தியுள்ளது. ஜனநாயகத்தின் வளர்ச்சி, பத்திரிகை வளர்ச்சியுடன் மிகவும் பின்னிப் பிணைந்துள்ளதால், நவீன ஜனநாயகத்தின் நிறுவன அங்கமாக மக்களால் பத்திரிகை அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

எனினும், அறிவியல் தொழில் நுட்பம் வளர்ந்து விட்ட இந்தக் காலத்தில், அச்சு ஊடகங்களுடனான நமது உறவு சுருங்கி வருகிறது. கடந்த 2024-ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வு, தினசரி மின்னணு ஊடகங்கள் மூலம் திரையைப் பார்க்கும் நேரம் 7.5 மணி நேரமாக உயர்ந்துள்ளது. அதே நேரத்தில் புத்தகங்கள், செய்தித்தாள்களைப் படிக்கும் நேரம் 25 நிமிஷங்களாகக் குறைந்துள்ளது எனத் தெரிவித்துள்ளது.

புத்தகம் என்பது அறிவுபூர்வமான, ஆக்கபூர்வமான மனநிலையில் நம்மை இயங்க வைக்கும் ஒரு கருவி. அதைக் கையிலெடுப்பதால் தற்சார்பு, தன்னம்பிக்கை, செழிப்பு, மகிழ்ச்சி, மலர்ச்சி, வளர்ச்சி ஏற்படும் என்பது நம் சான்றோர்கள் காட்டிய உண்மை. மேலும், புத்தக வாசிப்பு எழுத்தாளரையும், வாசகரையும் அறிவுத்தளத்தில் ஒன்றாக ,யங்கச் செய்து, அறிவாக மாறி, வாழ்க்கையையும் மாற்றி பல சாதனையாளர்களை உருவாக்கி வருகிறது.

அண்மைக்காலமாக சமூக ஊடகங்கள் எதிர்மறைத் தாக்கங்களையே ஏற்படுத்தி அதிக கவனத்தை ஈர்த்து வருகின்றன. அச்சு ஊடகங்கள், மின்ஊடகங்களின் பயன்பாட்டால் ஏற்படும் நேர்மறை, எதிர்மறைத் தாக்கங்களை அறிவியல் ஆய்வுகள் தொடர்ந்து அம்பலப்படுத்தி வருகின்றன. சமூக ஊடகங்களிடம் இருந்து நமது இளைய தலைமுறையினரை எவ்வாறு பாதுகாப்பது என்பது தான் இப்போது அரசுகளின் முன்னுள்ள தலையாய பிரச்சனை. இந்தக்கால சிறார்கள் அதிகமாக தங்களின் முழுத் திறனையும், உயிரனைய காலத்தையும் சமூகவலை(18ம் பக்கம் பார்க்க)

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

• Vistation
• Funeral & Memorial Service
• Reception
• Burial • Cremation



Vilosanan Sivatharman
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
• Lock in the cost at today's prices
• Convenient time payments
• Insured against early death

EMOTIONAL BENEFITS
• Letting your family know your wishes
• Peace of mind to you & your family
• Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com


SWARA SANGAMAM
2026
Sparkline
ENTERTAINMENT INC.
PASS
Selva's
SHASTHRA BAND
PICKERING CASINO RESORT
June 06, 2026 | 6:01 PM
(647) 336-5529
sparklinecanada@gmail.com
Exclusive Media Partner
www.MAKILCHI.ca
Premier
Healthcare Network
102.7
east FM தமிழ்
Ramanan
வழிகாட்டி
ஈழநாடு
DON VALLEY NORTH
TOYOTA
Senior Sales & Lease Consultant
Jega Kanapathypillai
ELITE MD AESTHETICS
MEDICAL, COSMETIC & LASER CLINIC
SHAN
THAYAPARAN
TEAM
KARTHIKA
SUPERMARKET
Conditions apply *. All rights reserved by Sparkline Entertainment Inc.

# தமிழின அழிப்பு நினைவு நாள்

## மே 18, திங்கட்கிழமை 2026

**Tamil Genocide Monument**
Chinguacousy Park, 9050 Bramalea Road

**காலை-11:00 - பி.ப.1:00 மணி சிங்குயுஸி பார்க்கில்**

**Albert Campbell Square**
(Scarborough Town Centre)

**மாலை 6:00 மணி, அல்பேர்ட் காம்பல் சதுக்கத்தில்**

இன அழிப்பின் உச்சமான முள்ளிவாய்க்கால்
தமிழின அழிப்பின் 17ஆம் ஆண்டு நினைவு நாள்




TAMIL GENOCIDE Remembrance Day

முள்ளிவாய்க்கால் உறவுகளுக்கு
நினைவுத் தீபம் ஏந்துவோம்

Join us to commemorate and memorialize
the genocide committed against the Tamil people in Sri Lanka

437 914 2178 | 647 975 0524

கனடியத் தமிழர் சமூகம் - கனடியத் தமிழ் மாணவர் சமூகம்



Secure. Grow. Protect.
Your Future, Your Terms -
Protect What Matters

KRISHNA
SABARATNAM
Insurance & Investments

I'm here to help! Call now
416-846-2685
Krishna.gsabaratnam@gmail.com
10 Thornmount Drive, Scarborough, ON, M1B 3J4.

# இலங்கையின் 2வது பெரிய மனிதப் புதைகுழி:- எலும்புக்கூடுகள் 254 ஆக உயர்வு



இலங்கையின் இரண்டாவது பெரிய மனிதப் புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வாய்வு ஆரம்பமாகி எட்டு நாட்களின் பின்னர் கண்டறியப்பட்ட மனித எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை 254 ஆக உயர்ந்துள்ளது.

செம்மணி சித்துப்பாத்தி இந்து மயான மனிதப் புதைகுழியில் இருந்து 249 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப் பட்டுள்ளதாகவும் 05 மே 2026 ஒரு குழந்தையின் எலும்புக்கூடு மீட்கப் பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர் களின் சார்பில் முன்னிலையாகும் மனித உரிமைகள் சட்டத்தரணி ரனிதா ஞானராஜா தெரிவித்துள்ளார்.

ஐந்து எலும்புக்கூடுகள் சுத்தப்படுத்தப் பட்டு இலக்கம் இடப்பட்டுள்ளது. இரண்டு எலும்புக்கூடுகள் முழுமை யாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இதற்கமைய அகழ்ந்து எடுக்கப்பட்ட மொத்த எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை 249. அகழ்ந்து எடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளில் ஒன்று சிறு குழந்தையினுடையது.

மேலும் அவர், சவப்பெட்டியில் புதைக்கப்பட்டது போன்ற ஒரு எலும்புக் கூடும் தோண்டி எடுக்கப்பட்டதாகவும், எரிந்த நிலையில் இருந்த பல எலும்புத் துண்டுகள் கண்டெடுக்கப்பட்டதாக வும் கூறினார்.

அகழ்வாய்வு ஆரம்பமான நாள் முதல் 05 மே வரை புதைகுழியிலிருந்து சில நாணயங்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளதாகவும் சட்டத்தரணி ரனிதா குறிப்பிட்டுள்ளார்.

ஆரம்பித்த நாள் முதல் இன்று வரை சில நாணய குற்றிகள், தங்க ஆபர ணம் எனக் கூறக்கூடிய ஆபரணம் ஒன்றும் எடுக்கப்பட்டுள்ளன.' அகழ்வுப் பணிக்கு அரசாங்கத்திடமிருந்து 2.1 மில்லியன் ரூபாய் நிதி கிடைக்கப் பெற்றதை அடுத்து செம்மணி சித்துப் பாத்தி இந்து மயான மனிதப் புதை குழியின் அகழ்வாய்வுப் பணிகள் 27 ஏப்ரல் 2026 அன்று யாழ்ப்பாண நீதவான் செல்வநாயகம் லெனின்குமார் முன்னிலையில் ஆரம்பமானது.

நீதிமன்ற உத்தரவின் பேரில் தடய வியல் தொல்பொருள் ஆய்வாளர் பேராசிரியர் ராஜ் சோமதேவ மற்றும் யாழ்ப்பாண சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன் ஆகியோரது வழிநடத்தலில் யாழ்ப்பாணம், செம் மணி சித்துப்பாத்தி மனித புதைகுழி யின் அகழ்வுப் பணிகள் முதன்முறை யாக 2025 மே 15ஆம் திகதி ஆரம்ப மாகின.

45 நாட்களாக முன்னெடுக்கப்பட்ட இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் 2025 செப்டம்பர் 06ஆம் திகதி மதியம் நிறைவடைந்த போது, மனிதப் புதை குழியிலிருந்து மீட்கப்பட்ட சிறுவர் கள் உள்ளிட்ட 240 மனித எலும்புக் கூடுகளில் ஒன்றைத் தவிர அனைத்து எலும்புக்கூடுகளும் அகழ்ந்து எடுக்கப் பட்டிருந்தன.

அகழ்வாய்விள் இரண்டாம் கட்டத்தின் போது மீட்கப்படாத மனித எலும்புக் கூடு இன்னும் மீட்கப்படவில்லை எனவும், அது பாதுகாக்கப்படுவதாக வும், பாதிக்கப்பட்டவர்களின் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணி வி. எஸ். நிரஞ்சன், ஏப்ரல் 30, 2026 அன்று ஊடகங்களிடம் தெரிவித்தார்.


செம்மணி சித்துப்பாத்தி இந்து மயான மனித புதைகுழியிலிருந்து மனித எலும்புகளுடன் இதுவரை அகழ்ந்து எடுக்கப்பட்ட ஏனைய பொருட்களுள் பால் போத்தல், பொம்மை உள்ளிட்ட விளையாட்டுப் பொருட்கள், சிறுவர் காலணிகள் மற்றும் பாடசாலைப் பைகளும் உள்ளடங்குகின்றன.

28 சிறுவர்கள் உட்பட 376 மனித உடல் பாகங்கள் கண்டெடுக்கப்பட்ட மன்னார் சதொச மனிதப் புதைகுழி யானது இலங்கையில் இதுவரை கண்டறியப்பட்ட மிகப்பெரிய மனிதப் புதைகுழியாக கருதப்படுகிறது.

# டெல்அவிவின்ஹபிமா சதுக்கத்தில் அரசாங்கத்திற்கு எதிராக இஸ்ரேலியர்கள் போராட்டம்!

03 டீம 2026 சனிக்கிழமையன்று டெல் அவிவின் ஹபிமா சதுக்கத்தில், ஈரான் மீதான போருக்கு எதிராக நூற்றுக் கணக்கான இஸ்ரேலியர்கள் போராட் டத்தில் ஈடுபட்டனர். அவர்கள் போரு க்கு எதிரான பதாகைகளை ஏந்திய படியும், பிரதமர் பெஞ்சமின் நெதன் யாகுவுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பியபடியும், தீவிர பழமைவாத யூத இராணுவத்தினருக்கான விலக்கு களை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்றும், 2023 அக்டோபர் 7 அன்று நடந்த தாக்குதல் குறித்து அரசு விசாரணை நடத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.



இது இவ்வாறிருக்க ஈரான் புதிதாகச் சமர்ப்பித்துள்ள சமாதான முன் மொழிவை ஆய்வு செய்யத் தயாராகி வருவதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார், இருப்பினும் அதன் ஏற்புத்தன்மை குறித்து அவர் குறிப்பிடத்தக்க சந்தேகத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

ஈரான் இப்போது நமக்கு அனுப்பி யுள்ள திட்டத்தை நான் விரைவில் ஆய்வு செய்யவிருக்கிறேன். ஆனால், கடந்த 47 ஆண்டுகளாக மனித குலத் திற்கும் உலகிற்கும் அவர்கள் செய்த கொடுமைகளுக்கு இன்னும் போது மான விலையைக் கொடுக்காததால், அந்தத் திட்டம் ஏற்றுக்கொள்ளத்தக்க தாக இருக்கும் என்று என்னால் கற்பனை செய்துகூட பார்க்க முடியவ ில்லை என்று டிரம்ப் ட்ரூத் சோஷியல் தளத்தில் எழுத்தினார்.

நாங்கள் முன்னரே தெரிவித்தபடி, ஈரான் மீதான போரை நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டு வருவதற்காக, தெஹ்ரான் 14 அம்சங்கள் கொண்ட புதிய முன்மொழிவை மத்தியஸ்தர் களிடம் சமர்ப்பித்துள்ளதாக ஈரானிய ஊடகங்கள் தெரிவித்தன.